# ராஜ்யத்தின் நீதிநெறி
## ETHICS OF THE KINGDOM

**அறிமுகம்**

சபையில் இருக்கும் ஒவ்வொரு அங்கத்தினரையும் இயேசுகிறிஸ்துவின் சீஷராகும்படி ஊக்குவிப்பது தான் இந்தப் புத்தகத்தின் நோக்கம். கற்றுக்கொள்பவர் என்ற அர்த்தத்தை தரும் மாத்தட்டஸ் (Mathetes) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து "டிஸ்சைப்பிள்" (Disciple - சீஷன்) என்ற ஆங்கில வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மாத் என்ற வேர்பகுதி "கடின முயற்சியால் உண்டாகும் சிந்தனையை குறிக்கின்றது." இதன் அடிப்படை அர்த்தம் என்னவென்றால் "ஒருவனுடைய குருவை அவன் பின்பற்றுவது" என்பதாகும் (vine's expository Dictionary of Biblical words). கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவிடமிருந்து கற்றுக்கொள்பவர்கள் மாத்திரமல்ல அவரை பின்பற்றுகிறவர்களாகவும் இருக்கிறோம். *பார்க்கவும் லூக்கா 9:57-62.* தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிப்பதன்மூலம் "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும்" அவர் செய்கின்ற ஊழியத்தில் நாமும் சேர்ந்துகொள்கின்றோம். ***லூக்கா 4:43; 19:10.***

தேவனுடைய ராஜ்யமும், கிறிஸ்துவின் ராஜ்யமும், தேவனுக்காக இயேசு கட்டிக்கொண்டிருக்கும் சபையும் ஒரே நோக்கம் உடையவைகளாக இருக்கின்றன. "எல்லா மனுஷரையும்" தம்முடைய பிள்ளைகளாக்கிக் கொள்ள வேண்டுமென்பதே படைப்பை பற்றிய தேவனுடைய நோக்கமாய் இருக்கின்றது. *கொலோ. 4:11; 1 தெசலோனிக்கேயர் 2:10-14; 2 தெசலோனிக்கேயர் 1:5; வெளி. 12:10.* கிறிஸ்தவர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளும் தெய்வ நம்பிக்கையுள்ள





லட்சக்கணக்கான மக்கள் ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பற்றி ஒருபோதும் கேள்விப்பட்டதே இல்லை. "தேவனுடைய ராஜ்யம்" என்ற வார்த்தைகளை சிலர் அறிந்திருக்கிறார்கள். ஒரு சிலர் ராஜ்யத்திற்கு உகந்த வாழ்க்கையை வாழ்கிறார்கள். தங்கள் வாழ்வைக் குறித்த தேவனுடைய நோக்கத்தின் மீது விசுவாசம் வைத்து, தொடர்ந்து அதில் நிலைத்திருப்பதற்கு முடியாமல் போராடிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவர்கள் மனந்திரும்பவேண்டும், ஏனெனில், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் தனிப்பட்ட முறையில் தேவனுடைய வசனத்தை கற்றுக்கொள்வதால் உண்டாகும் விசுவாசத்தினால் மாத்திரமே தேவனுடைய ராஜ்யமாகிய ஆவிக்குரிய இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்தை பார்க்கமுடியும். கிறிஸ்தவர்கள் வேதத்தை கற்றுக்கொள்ளும் அர்ப்பணிப்பு உள்ள மாணவர்களாக இருக்கின்றார்கள். நமக்காக மற்றவர்கள் கற்றுக் கொள்ளும்படி நாம் அனுமதிப்பது இல்லை.

கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட முறையில் கற்றுக்கொள்வதற்கு பிரயோஜனமாயிருக்கும்படி இந்தப் பாடத் தொகுப்பில் கால வரிசை முறையிலான தலைப்புகள் குறிப்பாகச் சொல்லப்பட்டுள்ளன. கால வரிசை முறையில் நம்முடைய விசுவாசம் வளர்ச்சியடையாவிட்டால், சில தலைப்புகளை நம்மால் புரிந்துகொள்ளமுடியாமல் போகலாம். "விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது." *ரோமர் 1:17.* எடுத்துக் காட்டாக, தேவன் நம்மை ஏன் உருவாக்கினார் என்று நாம் புரிந்துகொண்ட பிறகு, அவர் நம்மை எப்படி உருவாக்கினார் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். பிறகு, என்ன தவறு நேர்ந்தது? கிருபை ஏன் நமக்கு அவசியமாக இருக்கின்றது? இந்தக் கேள்விகளுக்கு மனிதனிடமிருந்து பதில்களை கற்றுக்கொள்ளாமல், தேவனிடமிருந்தே நாம் கற்றுக் கொள்கிறோம். தேவன் தெரிவிக்கின்ற பதில்களை நம்பும்படி நாம்

தீர்மானிக்கிறோம். அவருடைய பதில்களை நாம் சார்ந்து வாழ்கிறோம். அவருடைய பதில்களே நம்முடைய விசுவாசமாகின்றன. கிறிஸ்தவர் களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி இதன் பலனாக ஏற்படுகிறது. நமது விசுவாசம் கட்டி எழுப்பப்படுகின்ற வரிசை முறையிலேயே ஆவிக்குரிய வளர்ச்சியும் உண்டாகிறது. ‘‘மகிமையின்மேல் மகிமையடைந்து’’ கிறிஸ்தவர்கள் வளர்ச்சி அடைகிறார்கள். *2 கொரிந்தியர் 3:18.*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் பிரசங்கித்த சுவிசேஷம் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியே இருந்தது. *மாற்கு 1:14,15; அப்போஸ்தலர் 1:3;28:23,31.* நாம் கற்றுக்கொண்டவைகளில் நமக்கிருக்கிற விசுவாசம் தற்பொழுது நாம் கற்றுக்கொள்பவைகளில் நமது விசுவாசத்தை அதிகரிக்கச் செய்கிறது. அதே வேளையில், சில தலைப்புகள் மீது நமக்கு விசுவாசம் குறைவாக இருக்கும் பட்சத்தில், அது மற்றத் தலைப்புகளை புரிந்துகொள்வதற்கு இடையூறு ஏற்படுத்தலாம். உதாரணத்துக்கு, தேவன் நம்மை படைத்த நோக்கத்தில் விசுவாசம் இல்லாவிட்டால், நம்மை சுத்திகரிப்பதற்காக பரிசுத்த ஆவியானவர் செய்கின்ற செயலை புரிந்துகொள்ளவும், விசுவாசிக்கவும் நம்மால் முடியாது. *லூக்கா 6:35,36; 2 தெசலோனிக்கேயர் 2:13.* அநேக தெய்வ நம்பிக்கையுள்ள போதகர்கள், தேவனுடன் அவருடைய பிள்ளையாக இருக்கும்படிக்கு அவரால் முன் குறிக்கப்பட்ட தீர்மானத்தின்படி படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள மறுப்பதால், பரிசுத்த ஆவியானவருடைய வேலையைப் பற்றி போதிப்பதை தவிர்ப்பது போல் தெரிகிறது. *2 கொரிந்தியர் 6:17,18.*

நீதிநெறி என்பது எது நன்மை, எது தீமை என்பதை பற்றியதாக இருக்கின்றது. ஆதாமும், ஏவாளும் தேவன் தங்களோடு பண்ணியிருந்த உடன்படிக்கையை முறித்துப் போடாமல் இருந்திருந்தால், இந்தப் பாடத்தைப்





பற்றி நாம் படிக்க வேண்டிய அவசியமே இருந்திருக்காது. சிறு பிள்ளைகள் இதைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் எதிர்காலத்தில் அவர்கள் இதை கவனித்துக்கொள்ளவேண்டும். தேவன் கிறிஸ்தவர்களை படைத்திருக்கும் விதமானது நீதிநெறியுள்ள நடத்தையோடு பொருந்துவதாக இருப்பதனால், நீதிநெறியுள்ள வாழ்க்கையை வாழும்படி அவர்கள் போராடுகிறார்கள். எல்லா மனிதரும் ஆதாமிலிருந்து உருவாகியிருப்பதால், மற்ற மனிதர்களோடு நல்லுறவை நீடிப்பதற்கு நீதிநெறியுள்ள நடத்தை பிரயோஜனமாக இருக்கின்றது. வெப்ஸ்டருடைய அகராதியின்படி (Webster’s Dictionary) நீதிநெறி என்பது ஒழுக்கக் கோட்பாடுகள் அடங்கிய ஒரு தொகுப்பாகும். இந்த விளக்கத்திற்கு பொருத்தமானவைகளாகவே கிறிஸ்தவர்கள் பின்பற்றுகின்ற ஜீவப்பிரமாணங்கள் இருக்கின்றன. நீதிநெறியுள்ளவர்களாக இருக்கும்படியாகவே தேவன் மனிதர்களை வடிவமைத்திருக்கின்றார். “உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்.” *1 பேதுரு 1:15.* தேவனிடமிருந்து வந்த நமது ஆவிகள் அவருடைய சாயலாக இருக்கின்றன. நாம் எப்பேர்ப்பட்ட நீதிநெறியைப் பின்பற்றுகிறோம் என்பதை நம் நடத்தை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்தவர்கள், நீதிமான்களாக இருக்கும்படிக்கு பரிசுத்த நீதிநெறிக்கு ஏற்றபடி வாழ்வதற்காக போராடுகிறார்கள். *ரோமர் 6:19-23.*

சுவிசேஷ புத்தகங்களில் இயேசு தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய தலைப்புகளை போதித்ததனால், தலைப்புகளால் ஆன ஒரு பட்டியல் பதினான்காம் பாடத்தின் கடைசியில் சேர்க்கப்பட்டது. இந்த தலைப்புகளுக்கும், இயேசு போதித்தவைகளை நேரடியாக கேட்டவர்கள் மற்றும் அதன்பிறகு இயேசுவானவர் ராஜாவாகவும், ஆசாரியராகவும்

கிறிஸ்தவர்கள் மீது செய்கின்ற ஆளுகை ஆகியவற்றுக்கும் தொடர்பு ஏற்படுத்துவதாக இந்தப் பாடம் உள்ளது. கிறிஸ்தவர்கள் கற்றுக் கொள்ளுகின்ற வேதபாடம், தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய சத்தியத்தையும், தேவனுடைய கிருபையையும் புரியவைக்கின்றது. தேவனுடைய ராஜ்யமாகிய இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்தில் நாம் பரிசுத்த வாழ்க்கை கோட்பாடுகளை கற்றுக்கொள்கிறோம். *எபேசியர் 5:5.* இந்தப் பாடத்தில் பெரும்பாலான பகுதிக்கு கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்புகள் கிறிஸ்தவர்களுக்கான நீதிநெறியை சார்ந்தவைகளாக இருக்கின்றன.

**பாடம்**

## I ஒற்றுமை

***"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்." யோவான் 17:21.***

ரோமாபுரியிலிருந்த பரிசுத்தவான்களை வாழ்த்தின "கிறிஸ்துவின் சபையாரோடு" கிறிஸ்தவர்களை அடையாளப்படுத்துகின்றோம். *ரோமர் 16:16.* இயேசு தமது பிதாவுக்காகக் கட்டிக்கொண்டிருக்கும் "தேவனுடைய சபையில்" அங்கத்தினர்கள் என்ற அடையாளமும் நாம் பெற்றிருக்கிறோம். *மத்தேயு 16:18; ரோமர் 16:16; 1 கொரி. 1:2;10:33;11:16; 15:9; 2 கொரிந்தியர் 1:1.* "என் சபையைக் கட்டுவேன்" என்று இயேசு சொன்ன போது அவர் செய்த மற்ற எல்லாவற்றையும் போலவே இதையும் தமது பிதாவுக்காகக் கட்டுவதாக சொன்னார். சாத்தானுடைய ராஜ்யத்திலிருந்து "வெளியே அழைக்கப்பட்டிருக்கிற" நம்மை பயன்படுத்தி இயேசு பிதாவுக்கு ஆலயத்தைக் கட்டுகின்றார். அது நம்முடைய இருதயங்களிலும், மனங்களிலும் கட்டப்பட்டு நம்முடைய நீதியுள்ள நடக்கையில்





வெளிப்படுத்தப்படுகிறது. *1 கொரிந்தியர் 3:16; எபேசியர் 2:19-22.* இயேசு தமது பிதாவுக்காக ஒரு நித்திய குடும்பத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். *எபி. 2:10-15; 1 பேதுரு 1:22-25.*

தேவனுடைய ராஜ்யத்துக்கும், இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்துக்கும், தேவனுக்காக இயேசு கட்டிக்கொண்டிருக்கும் சபைக்கும் இடையில் உள்ள உறவைப் பற்றி பதினைந்தாம் பாடம் பேசுகிறது. இந்த மூன்று அமைப்புகளிலுமே தேவனுக்காக பிள்ளைகளை உருவாக்கின்ற ஒரே மாதிரியான திட்டம் இருப்பதை கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள உதவுவதற்காகவே இப்பாடத்தின் "அறிமுகப் பகுதியில்" இதைப்பற்றி சுருக்கமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. படைப்பை பற்றிய தேவனுடைய நோக்கத்தில் சபையிலிருக்கும் மக்கள் யாவருக்கும் ஒருமித்த கருத்து இல்லாமற்போனால், தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதி உள்ளவர்களாக நம்மை ஆக்க வல்ல ஐக்கியம் நம் மத்தியில் இருக்காது. *லூக்கா 9:62.* சபையாகிய கர்த்தருடைய ராஜ்யத்தில் குடிமக்களாக இந்தப் பூமியின் மீது வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கு இடையில் இருக்கும் உறவு எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு அப்போஸ்தலனாகிய பவுலுக்கும், பிலிப்பு பட்டணத்தில் இருந்த சபைக்கும் இடையில் இருந்த உறவை நீடித்த மதிப்புடைய ஒரு உதாரணமாக நாம் பார்க்கலாம். பிலிப்பு பட்டணத்தில் இருந்த சபை சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற நோக்கத்திற்காக பவுலுடன் எல்லாவற்றிலும் பங்கு உள்ளதாக இருந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்வதற்காக அவர்கள் செய்த காரியம் அவர்களுடைய பாசத்தை வெளிப்படுத்தியது. அவர்கள் ஒருமித்து சந்தோஷப்பட்டார்கள். ஒன்றாகவே பாடுபட்டார்கள் அவர்களுக்கு இடையில் இருந்த தொடர்பு பிதாவாகிய தேவனையும் உள்ளடக்கியதாக இருந்தது. *பிலிப்பியர் 1:3-8,27-30; 2:25-30;4:4-7,10,14.*

சபையில் ஒவ்வொரு அங்கத்தினரும் தன்தன் அளவுக்குத் தக்கதாய் கிரியை செய்தவதால், எப்படிச் சபையானது இசைவாய்க் கூட்டி இணைக்கப்படுகிறது என்பதைப் பற்றி கிறிஸ்தவர்களுக்குத் தெளிவு இல்லாமல் போனால், சபையில் அவர்களால் ஒற்றுமையை நிலைநாட்ட முடியாது. பார்க்கவும் *எபேசியர் 4:14-16.* அது மட்டுமல்ல, தேவனுடைய ராஜ்யத்துக்கும், கிறிஸ்துவின் ராஜ்யத்துக்கும், தேவனுக்காக இயேசு கட்டிக் கொண்டிருக்கும் சபைக்கும் இடையில் உள்ள உறவைப் பற்றியும் அவர்களுக்குத் தெளிவான கருத்து இருக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர்களுடைய வேதபாடத்தில் சம்பந்தமில்லாத தலைப்புகளே இடம் பெற்றிருக்கும். தேவன் மனுக்குலத்தை உருவாக்கியது ஏன் என்பதைப் பற்றி அவர் தெரிவிக்கின்ற வரலாறாக வேதாகமம் அமைந்திருப்பதால், அதிலுள்ள ஒவ்வொரு காரியமும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக அமைந்துள்ளது. சம்பந்தமில்லாத தலைப்புகள் உள்ள வேதபாடத்தினால் பிரிவினைக்கும், தேவனைப்பற்றியோ அவருடைய படைப்பைப் பற்றியோ அறிந்து கொள்ள முடியாது என்ற கொள்கைக்கும் (Agnosticism) தான் அதிக இடமுண்டாகும். நீதிநெறியில்லாத நடத்தையின் விளைவாகவே பிரிவினை உண்டாகின்றது.

தேவனைப் பற்றியோ, அவருடைய படைப்பைப் பற்றியோ அறிந்து கொள்ள முடியாது என்ற கொள்கையை வெகு சீக்கிரத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைமையில் தான், தேவனுக்குத் தங்களை முழுமையாக ஒப்புக்கொடுக்க முடியாத கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இது அக்கறை இல்லாமல் வாழ்கின்ற ஆவிக்குரிய வியாதியை அவர்கள் அடைவதற்குத் தான் வழி வகுக்கும். "இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பா யிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன்" என்று இயேசு எச்சரித்தார். *வெளி. 3:16.* தேவனுடைய





ஞானத்தால் கட்டப்பட்டு வருகின்ற சபையானது கிறிஸ்துவின் சரீரமாக செயல்படுவதால், தேவனுக்குத் தன்னை ஒப்புக்கொடுக்க மனமில்லாத அங்கத்தினன் அந்தச் சபையின் ஒற்றுமைக்குத் தடையாகவே இருக்கிறான். *1 கொரி. 12:12-27.* தங்கள் மாம்சத்திற்குரிய சரீரத்தின் ஒரு அவயவம் சரீரத்தின் செயல்பாட்டுக்கு ஒத்துழைக்க வில்லையானால், மக்கள் மருத்துவரிடம் செல்கிறார்கள். துரதிர்ஷ்ட வசமாக, லவோதிக்கேயா சபையைப் போன்ற நிலைமையில்தான் "கிறிஸ்துவின் சபைகள்" என்று தங்களை தெரிவித்துக்கொள்ளும் சபைகள் பலவற்றின் நிலையும் இருக்கின்றது. விதை விதைப்பதைப் பற்றி இயேசு சொன்ன உவமையில் அவர் குறிப்பிட்ட மூன்றாவது வகை நிலம் போலத்தான் இப்பேர்ப்பட்ட சபை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். *மத்தேயு 13:7,22.* வெளிப்படுத்தல் இரண்டாம் மற்றும் மூன்றாம் அதிகாரங்கள் தேவனுடைய சமூகத்தில் இருப்பதற்கு ஒரு சபை உகந்ததாக இருக்கிறதா என்பதை இயேசு எப்படி தீர்மானிக்கிறார் என்று தெரிவிக்கின்றன. *வெளி. 1:20* ஆம் வசனத்தில், ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகள் என்று இயேசு சொன்னார். நீ மனந்திரும்பாத பட்சத்தில் உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன் என்று எபேசு சபையிலும் அவர் சொன்னார். *வெளி. 2:5.* எபேசு சபை ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டது. நாம் இந்த எச்சரிப்பை கேட்டு, விசுவாசத்தை சோதித்துப்பார்க்கவேண்டும். *2 கொரி. 13:5.* நாம் தேவனிடமும், கிறிஸ்துவினிடமும், பரிசுத்த ஆவியானவரிடமும், மனுக்குலத்திடமும் அன்புகூராமலிருப்பது நீதியான செயல் அல்ல.

பல நூற்றாண்டுகளாக "மனிதருடைய ஞானத்தால்" கட்டப்பட்ட சபைகளை தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனையைக் குறித்து தேவபக்தியுள்ள மக்கள் விவாதித்து வருகிறார்கள். இயேசுவின் ராஜ்யத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்ற கிறிஸ்தவர்களுக்கு இப்படி

விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை. நிச்சயமாக, நாத்திகர்கள் தான் கிறிஸ்துவின் ராஜ்யத்தை விட சாத்தானுடைய ராஜ்யம் நல்லதென்று நினைத்து அதில் அங்கத்தினராய் இருப்பதைப் பற்றி வாக்குவாதம் பண்ணுவார்கள். இந்த இரண்டு ராஜ்யங்களில் ஏதோ ஒன்றில் தான் மனுக்குலமானது குடியுரிமைப் பெற்றுக்கொள்ள முடியும். அப்படி யிருப்பினும் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் குடிமக்கள் அவரவர் விருப்பத்திற்கேற்ப குறிப்பிட்ட போதகர்களோடு சேர்ந்துகொண்டு தங்களுக்குள் பிரிவினைகளை ஏற்படுத்திக்கொண்டார்கள். இது அகாயா நாட்டில் உள்ள சபைகளில் ஒரு பிரச்சனையாக உருவானது. “கொரிந்தியருக்கு எழுதப்பட்ட நிருபங்கள்” என்ற தலைப்பிலுள்ள என் புத்தகத்தின் மூன்றாம் பாகத்தை தயவுகூர்ந்து பாருங்கள். தனிப்பட்ட முறையில் வேதத்தை கற்றுக்கொள்வதன் மூலமாக ஒற்றுமையை வளர்த்துக்கொள்ளும்படி கொரிந்து பட்டணத்தில் இருந்த தேவனுடைய சபையின் அங்கத்தினர்களுக்கு பவுல் புத்திச் சொன்னான்.

*“சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாயச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். 1 கொரிந்தியர் 1:10.*

சபையின் அங்கத்தினர்கள் “ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருப்பதற்கு” பரிசுத்த ஆவியால் கொடுக்கப்பட்டுள்ள வசனங்களைக் கேட்பது அவசியம். கிறிஸ்தவர்கள் ஜாக்கிரதையாகக் கற்றுக்கொண்டு, கிறிஸ்தவர்களுக்கு நன்மை உண்டாக வேண்டுமென்று, சபையில் போதிக்க பாடங்களை தயார் செய்கிறார்கள். ஆயினும் வசனங்களின் அர்த்தங்களை குறித்த மற்றவர்களுடைய





நம்பிக்கைகளை சத்தியத்தின் அடிப்படையில் மதிப்பிட்டுப்பார்க்க வேண்டியது அவசியம். நீதியையும் அநீதியையும் பற்றியும், தேவனையும் சாத்தானையும் பற்றியும், ஜீவனையும் மரணத்தையும் பற்றியும், நன்மையையும் தீமையையும் பற்றியும் தேவன் தெரிவித்துள்ள சத்தியமானது மிகவும் விலையேறப்பெற்றதாய் இருக்கின்றது. இதனால் சபையில் போதகர்களும், பிரசங்கியர்களும் சொல்லுகின்றவைகளை மதிப்பிட வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இருக்கின்றது. நாம் கிறிஸ்துவின் சீஷர்களாக இருந்தால் மட்டும் தான் இந்த வேலையைச் செய்யக்கூடிய தகுதி நமக்குக் கிடைக்கும். சுவிசேஷத்தை போதிப்பவர்களோ அல்லது பிரசங்கிப்பவர்களோ தங்களுக்காக சீஷரை உருவாக்க முயற்சிப்பதில்லை. *1 கொரி. 3:5.* கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபத்தில் முதல் நான்கு அதிகாரங்களை இந்தப் பிரச்சனையை மையப்படுத்தி தான் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினான். கொரிந்து பட்டணத்தை விட்டு புறப்பட்டு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்க எபேசுவுக்கு பவுல் போய் விட்ட பிறகு, கொரிந்து சபையின் அங்கத்தினர்கள் பிரிவினை உண்டாக்க ஆரம்பித்தார்கள். சிலர் தேவனுடைய வசனத்துக்கு கொடுத்து வந்த முக்கியத்துவத்தை விட, மிகவும் பாராட்டப்பட்ட பவுல் போன்ற மனிதர்களுடைய ஞானத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவந்தார்கள். *1 கொரி. 1:12;3:1-4.* பவுல் தேவனுடைய ராஜ்யத்தையும், மார்க்கத்தையும், வசனத்தையும் குறித்து எபேசுவிலிருந்த மக்களுக்குப் பிரசங்கித்தான். *அப்போஸ்தலர் 19:8-10.* பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய மனதில் இருப்பதைப் பற்றி அறிந்திருக்கிறார். அதுமட்டுமல்ல அப்போஸ்தலர்களை வழிநடத்துவதற்கு அவர் இயேசு கிறிஸ்துவுக்கும் உதவியாயிருந்தார். *யோவான் 16:13-15.* இயேசு தமது பிதாவின் சித்தத்தை புரிந்துகொண்டார். அதை போதிக்கவும் செய்தார்.

ஆகையினால், புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாக இயேசு கிறிஸ்துவை சேவிப்பதற்கு வேண்டிய தகுதியை பரிசுத்த ஆவியானவரால் பவுல் பெற்றுகொண்டான். *1 கொரி. 2:10-13; 2 கொரி. 3:5.*

இன்றைக்குள்ள கிறிஸ்தவத்தில் காணப்படும் பிரிவினைக்கு என்ன காரணம் என்பதை நம்மால் பார்க்க முடியவில்லையா? தேவனுடைய மனதிலிருந்து வரும் காரியத்துக்கு அர்த்தத்தை தெரிந்துகொள்ள புத்திசாலியான மக்கள் "சாதாரண மனிதர்களை" தேடிக்கொண்டு இருக்கிறார்கள். உலகளாவிய கிறிஸ்தவ சபையில் பிரிவினை அதிகரித்துக் கொண்டே போவதற்கு இதுவே காரணமாக இருக்கின்றது. சபையின் அங்கத்தினர்கள் தமது நிருபங்களை வாசித்து, புரிந்துகொள்ள வேண்டுமென்பது அப்போஸ்தலனாகிய பவுலுடைய எதிர்பார்ப்பாய் இருந்தது. "மாம்சத்தின்படி ஞானிகள்" என்று சொல்லப்பட தகுதியில்லாத சபை அங்கத்தினர்களும் அவனுடைய நிருபங்களை புரிந்துகொள்ள முடிந்தது. *1 கொரி. 1:26.* வளர்ந்து வந்த தெசலோனிக்கே சபையைப் போல கிறிஸ்தவர்கள் எல்லாரும் செயல்படவேண்டுமென்று இயேசு எதிர்பார்க்கின்றார்.

*நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி, இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள். எப்படியெனில், உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனி யாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாயிராதபடிக்கு, தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று. 1 தெசலோனிக்கேயர் 1:6-8.*





**II வெளிப்படுத்துதல் :**

பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு **வெளிப்படுத்தினபடியால்** உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். *மத்தேயு 11:25.*

**நமது கவலை** : ஞானிகளும், கல்விமான்களும் ஏன் இயேசுவை பின்பற்றுவதில்லை? பாலகர் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள நெப்பியோஸ் (Nepios) என்ற கிரேக்க வார்த்தையின் மூலம் இயேசு எதை அர்த்தப்படுத்தினார்? நெப்பியோஸ் என்றால் புதிதாய் பிறந்த குழந்தை என்று அர்த்தம்; *மத்தேயு 21:16*ஆம் வசனத்தில் குழந்தைகளை குறிப்பிடுவதற்கே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது. இயேசு உருவகமாக இதை பேசியிருக்கலாம்; அதாவது மனுஷருடைய ஞானத்தின்படி "ஞானிகளாகவும், கல்விமான்களாகவும்" இருப்பவர்கள் தேவனுக்கு செவிகொடுக்கக் கூடிய தாழ்மையும், ஞானமுமுள்ள கபடற்ற மக்களுக்கு முரண்பாடாக இருக்கிறார்கள். *யாக்கோபு 1:5; 4:6.* "எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு சொன்னபோது உண்மையாகவே சிறுபிள்ளைகளை தான் குறிப்பிட்டு பேசினார். *லூக்கா 18:16,17.* ஒருவேளை இது, இயேசுவானவர் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்கும் ஊழியத்தை ஆரம்பிக்கும் முன்பு, அதைப் பற்றி தமது சொந்த ஊரில் ஜெப ஆலயத்தில் அவர் மக்களுக்கு தெரிவித்த வாக்கியத்தை ஆழ்ந்து சிந்திப்பதற்கு உதவியாக இருக்கும்.

*கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்,*

*குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங் குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார். லூக்கா 4:18,19.*

இயேசுவின் போதனைகளை மக்கள் நிராகரிப்பதைக் குறித்து அவர் பிரசங்கித்தார். அதைத் தொடர்ந்து அவர் தேவனை நோக்கி தெரிவித்த "புகழ்ச்சி வாக்கியத்தை" மத்தேயு பதிவு செய்து வைத்திருக்கிறான். யோவான் ஸ்நானனை பிசாசு பிடித்திருக்கிறவன் என்று சொன்னார்கள். மற்றவர்கள், இயேசுவை போஜனப்பிரியன் என்று சொன்னார்கள். *மத்தேயு 11:18; லூக்கா 7:33,34.* இயேசு கலிலேயாவில் பல பட்டணங்களில் அற்புதங்களைச் செய்து பிரசங்கம் பண்ணிக்கொண்டு வந்த போதிலும் கூட அவர்கள் மனந்திரும்பவேயில்லை. *மத்தேயு 11:20-24.* இயேசுவின் போதனைகளை மக்கள் புறக்கணிக்கின்றபோது, அன்று போலவே இன்றும் அவர் மனவேதனை அடைகின்றார். அதே சமயத்தில் அவர் ஒரு புறஜாதியானிடத்தில் விசுவாசத்தைக் காண்பாரானால், மிகவும் சந்தோஷப்படுகிறார். *லூக்கா 7:9.* மக்கள் தேவனுடைய புதிய உடன்படிக்கையைக் குறித்து கேள்விப்பட்டு, மனந்திரும்புதலின் மூலம் அதை ஏற்றுக்கொண்டு, தங்கள் கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கென்று ஞானஸ்நானம் பண்ணப்படுகிறபோது இயேசுவும், பரலோகத்தில் தேவ தூதர்களும் இன்றும் சந்தோஷப் படுகிறார்கள். *லூக்கா 15:7,10,31,32.* தமது போதனையை எல்லாரும் கேட்க வேண்டுமென்று இயேசு விரும்பிய போதிலும் மனுஷருடைய ஞானத்தின்படி "ஞானிகளும் கல்விமான்களுமாய்" இருப்பவர்கள் தம்மை பின்பற்றமாட்டார்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார். *1 கொரி. 1:20-25; 1 தீமோ. 2:4.* ஆவிக்குரிய காரியங்களைப் பற்றிய





மனுஷருடைய ஞானத்தை ஏற்றுக்கொள்வது நீதிக்குப் புறம்பானதாகும். தேவனுடைய ராஜ்யத்திற்குரிய ஜீவனைப் பற்றிய தேவனுடைய ஞானத்தை ஏற்றுக்கொள்வதே நீதியாகும்.

தேவனுடைய ஞானம் ஒரு சபைக்கும் ஒரு தனி நபருடைய வாழ்க்கைக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கின்றது. *1 கொரி. 1:31; 2:6-10.* கிறிஸ்தவர்களாகிய நாம் ஆவிக்குரிய சத்தியத்தை கற்றுக்கொண்ட பிறகு, ஆவிக்குரிய ஞானத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஆவிக்குரிய சத்தியம் நமக்குள் இருந்தால் மாத்திரம் தான், நாம் எதிர்கொள்கின்ற மாம்சத்திற்குரிய பிரச்சனைகளை சமாளிப்பதற்கு வேண்டிய தேவ ஞானத்தை அவரிடம் கேட்க முடியும். *யாக்கோபு 1:5-7.* நம் வாழ்வின் அனுபவங்களில் சத்தியத்தை செயல்படுத்துவதற்காக நாம் தேவனிடம் உதவி கேட்டு ஜெபிக்கிறோம். நமக்குள் தேவன் ஏற்படுத்தியிருக்கின்ற இயல்பான தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்கும் நாம் அவருடைய ஞானத்தைக் கேட்கலாம்.

"இந்தச் சந்ததியை" குறித்த தமது ஆராய்ச்சியினை இயேசு இவ்விதமாக முடித்தார். "ஆனாலும் ஞானமானது அதன் பிள்ளைக ளெல்லாராலும் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும் என்றார்." *லூக்கா 7:31,35.* கிறிஸ்தவ உலகத்தைச் சேர்ந்தவர்கள் மனந்திரும்ப வேண்டியது அவசியமாய் இருக்கின்றது. ஏனெனில், "பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது." அவர்களுடைய பிள்ளைகளே கிறிஸ்தவர்களாக அடையாளப்படுத்தப்படும் இக்காலத்து சந்ததியாய் இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாறவில்லை. அவர்களுடைய நடத்தை இதை வெளிப்படுத்துகின்றது. விபசாரக்காரராகவும், பொருளாசைக்காரராகவும், விக்கிரக ஆராதனைக்காரராகவும் இருப்பது நீதிக்கு எதிரானதாகும். *1 கொரி. 5:9;6:9-11.* சபைகள் தேவபக்திக்குரிய

சுலோகங்களை மேல் பூச்சாகக் கொண்டு சமுதாய சங்கங்களைப் போலவே பெரும்பாலும் செயல்படுகின்றன; அவர்கள் கர்த்தருடைய நாமத்தில் பணம் வசூலித்து தங்களுக்காக செலவு செய்துகொள்கிறார்கள். சபையின் தனிப்பட்ட அங்கத்தினர்கள் சுயநலமாய் இருப்பதைப் போலவே ஒரு சபையும் சுயநலமானதாக இருக்க முடியும்.

இயேசு பரலோகத்திற்குத் திரும்பச் சென்று ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன. "எல்லா மதங்களும் கடவுளுக்கு சந்தோஷத்தை கொடுக்கின்றன" என்பதே இன்றைய மத அரசியலின் கருத்தாக இருக்கின்றது. இயேசு கிறிஸ்து போதித்த நீதிநெறிகள் குறுகிய மனப்பான்மை உடையவை என்று பெயரிடப்பட்டு ஒதுக்கப்படுகின்றன. இன்று கிறிஸ்தவ நீதிநெறிகள் என்று அழைக்கப்படுகிறவைகளோ உலக மக்களுடைய நீதியை விடவும் தாழ்ந்த நிலைமையில் இருக்கின்றன. ஒழுங்குபடுத்தப்பட்ட குழுக்கள் சபைகள் என்ற அடையாளத்தோடு சோதோம் கொமோராவின் கலாச்சாரத்தை பின்பற்றுகின்றன. *ஆதி. 19:1-5; ரோமர் 1:24-28.* விசுவாசிகள் வெளியே அழைக்கப்பட்டவர்களாகத் தான் இருக்கிறார்கள். ஆனால் பல சமயங்களில் இது தலைகீழாக நடந்து வருகிறது. அவர்கள் இப்போது ஒளியிலிருந்து இருளுக்கு அழைக்கப்படுகிறார்கள். கிறிஸ்துவின் ராஜ்யத்திலிருந்து மறுபடியும் சாத்தானின் ராஜ்யத்துக்கு அழைக்கப்படுகிறார்கள். ஒரு பிரச்சனை வெட்ட வெளிச்சமாய் இருக்கின்றது. சாத்தானுடைய ராஜ்யத்தில் இன்றளவிலும் வாழ்ந்து வரும் மக்களுக்கு தேவன் அவர்களை படைத்த நோக்கத்தைப் பற்றியோ, அவருடைய ராஜ்யத்தைப் பற்றியோ போதிக்கப்படுவதில்லை. *அப்போஸ்தலர் 26:16-18* வசனங்களில் இயேசு அப்போஸ்தலனாகிய பவுலிடம் ஒப்படைத்த ஊழியப்பணியினை மீண்டும் ஒருமுறை கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள்.





வாழ்வின் அனுபவங்களில் சத்தியத்தை செயல்படுத்துவதே ஞானமாக இருக்கின்றது. வாழ்வைக் குறித்த சத்தியத்தை இயேசு வெளிப்படுத்தினார். இந்த வெளிப்படுத்துதலை "ஞானிகளும் கல்விமான்களும்" ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த உலகம் மரணத்தை ஜீவன் என்று அழைக்கின்றது. *யோவான் 5:24; எபேசியர் 2:1-3; 1 யோவான் 2:15-17.* "ஞானிகளும், கல்விமான்களும்" தங்களுடைய சொந்த ஞானத்தினால் எதைத் தேடிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைப் பற்றிய சத்தியத்தை தமது போதனையில் இயேசு வெளிப்படுத்தினார். தேவனுடைய தன்மையின் சொரூபமாயிருந்து எல்லா மனிதர்களுடைய வாழ்க்கைப் பற்றிய சத்தியத்தை இயேசு வெளிப்படுத்தினார். *யோவான் 1:3-5,12,13; எபிரெயர் 1:1-3.* "எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று." *1 கொரி. 1:21.* "கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்." *1 கொரி. 1:24.*

"நற்செய்தி" என்ற வார்த்தையை கேட்கின்ற போது அநேக மக்கள் என்ன நினைக்கிறார்கள்? நிச்சயமாய் சிலுவையைப் பற்றித் தான். பவுல் இதை வலியுறுத்தவில்லையா? "நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப் பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து." *1 கொரி. 15:3,4.* இன்னும் வேறு நற்செய்தி இருக்கின்றதா? மூன்று வருடங்களுக்கும் அதிகமாக பிரசங்கம் பண்ணினதின் மூலம் சிலுவையின் மீது தாம் பலியாவதை மட்டும் தான் இயேசு வெளிப்படுத்தினாரா? பேதுரு, பவுல், பிலிப்பு ஆகியோரையும் மற்றவர்களையும் ஆவியானவர் வழிநடத்தி பிரசங்கிக்க வைத்தது சிலுவையைப் பற்றி மட்டும்தானா? இயேசு

சிலுவையைப் பற்றி பிரசங்கித்துக்கொண்டு சென்றாரா? அல்லது தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி பிரசங்கித்துக்கொண்டு சென்றாரா? மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தே பிரசங்கித்தார்; தேவன் அவரை மரித்தோரிலிருந்து உயிரோடே எழுப்பிய பிறகும், நாற்பது நாளளவும் அதைக் குறித்துதான் பிரசங்கித்தார். இயேசு சிலுவையில் பாவங்களுக்காக மரித்ததன் பலனை, புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள உபதேச சட்டத்தை யாரெல்லாம் ஏற்றுக்கொள்கிறார்களோ, அவர்களெல்லாரும் அனுபவிக்க முடியும். *ரோமர் 8:17.* படைப்பைப் பற்றிய தேவனுடைய நோக்கம் இதுவல்ல. ஆயினும், தேவனுடைய நித்திய ராஜ்யத்தில் பிள்ளைகளை ஏற்படுத்த வேண்டும் என்ற அவருடைய நோக்கம் நிறைவேறுவதற்கு அவசியமான கிருபையை இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்த தியாகம் உண்டாக்கியது.

புதிய உடன்படிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள ஜீவப்பிரமாணமே **வெளிப்படுத்தப்பட்ட** சத்தியமாய் இருக்கின்றது. *எபிரெயர் 8:10-12.* பெரும்பாலும் புதிய உடன்படிக்கையின் ஒரு பகுதி மாத்திரம்தான் வெளிப்படையாக பிரசங்கிக்கப்படுகிறது; "அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்." பாதி உண்மைகளும் பொய்கள் தான். பொய் சொல்வது நீதிக்கு எதிரானது. "கிறிஸ்தவ சமுதாயத்திற்கு" தேவனுடைய புதிய உடன்படிக்கையும் தெரியவில்லை, இயேசு எப்படி "ஜீவப்பிரமாணமாக" இருக்கிறார் என்பதும் புரியவில்லை. சிலுவையின் மீது தொங்கிய இயேசுவைப் பற்றி அவர்கள் **தெரிந்து வைத்திருக்கிறார்கள்.** எப்படியிருப்பினும் கிறிஸ்து ராஜாவாகவும் பிரதான ஆசாரியராகவும் இருக்கிறார்; அதிபதியாகவும் இரட்சகராகவும் அவரைப் பற்றி நாம் அறிவிக்க வேண்டும். *அப்போஸ்தலர் 2:32-35; 5:31; எபிரெயர் 4:14-16.* "கிறிஸ்துவுக்குள்" இருக்கின்ற ராஜ்யமானது கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட கிருபையாக இருக்கின்றது.





"ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை." *ரோமர் 8:1.* கிறிஸ்தவர்களுக்காக செயல்பட்டுக்கொண்டிருக்கும் இயேசுவின் ஆசாரியத்துவம் இது தான். "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே." *ரோமர் 8:2.* இயேசு பரிசுத்த ஆவியானவருடன் ஒன்றிணைந்து ராஜாவாக செயல்பட்டுக் கொண்டிருப்பதன் பலனாக இது இருக்கின்றது. சாத்தானுடைய அந்தகார லோகாதிபதிகளுக்கு எதிராக இயேசுவானவர் நடத்துகின்ற போராட்டத்தில் "பாவம் மற்றும் மரணம்" ஆகியவற்றிலிருந்து மனுக்குலத்தின் ஆவிகளைக் காப்பாற்றுவதே முக்கிய நிகழ்ச்சியாக இருக்கின்றது. இந்தப் போராட்டத்தில் வயதில் பெரியவர்களாக இருக்கும் மக்களுடைய பங்கு என்னவென்றால், தங்களுடைய கடந்த கால பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு முன்பு மனந்திரும்புதலில் புதிய உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வதே ஆகும். தேவனுடைய புதிய உடன்படிக்கையின்படி தொடர்ந்து வாழ்வதே கிறிஸ்தவர்களுடைய பங்காக இருக்கின்றது. கிறிஸ்து தங்களில் உருவாவதற்காக தங்களுடைய இருதயங்களையும், மனங்களையும் திறக்கின்றவர்களுடைய குணங்களும், செயல்பாடுகளும் இயேசுவின் சாயலுக்கு ஒப்பாக மாறுகின்றன. அவருடைய ஜீவன் நம்முடைய வாழ்க்கைக்கு ஒளியாக இருக்கின்றதினால் இந்த மாற்றம் நிகழும். *ரோமர் 8:29; கலாத்தியர் 4:19.* மேற்காணும் மாற்றம் உருவாவதற்கு ஞாயிற்றுக்கிழமை தொழுகையில் கலந்து கொள்வதும், பிரசங்க மேடையில் இருந்து "பிரசங்கியார் பண்ணும் பிரசங்கத்தை" கவனிப்பதும், தங்கள் பாவங்களை மன்னிக்கும்படி தேவனிடம் வேண்டுதல் செய்வதும் மாத்திரம் போதாது. வேதாகமத்தை போதிக்கும் போதகர்கள் தங்களுடைய நிலையை தக்க

வைத்துக்கொள்வதற்காக தாங்கள் புரிந்துகொண்டுள்ள **வெளிப்பாட்டை** தெரிவிக்காமல் மறைத்து வைப்பது நீதிக்கு எதிரானது. *2 தீமோ. 4:1-5.*

தேவனுக்காக இயேசு கட்டிக்கொண்டிருக்கும் சபையையும், கிறிஸ்துவின் ராஜ்யத்தையும், தேவனுடைய ராஜ்யத்தையும் குறித்து மக்கள் புரிந்துகொள்ளும் விதமாக வெளிப்படுத்தப்படவில்லை என்பதையே இந்த புத்தகம் அழுத்தமாகச் சொல்கின்றது. வசனங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. ஆனால், ராஜ்யத்தைப் பற்றிய செய்தி இயேசு கிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்டது போல தெரிவிக்கப்படவில்லை. இப்பொழுது இயேசுவின் ராஜ்யத்தில் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும்படிக்கு ஒரு தெளிவான அழைப்போடு ராஜ்யமானது பாவிகளுக்கு வெளிப்படுத்தப்படுவதில்லை; ஆகையினால், ராஜ்யமானது விசுவாசிகளுக்குள் ஒரு சக்தியாக உருவாகாமலே போய்விட்டது. இயேசு குறிப்பிட்ட அந்தப் “பிள்ளைகள்” வெளிப்படுத்தலை பெற்றிருந்தார்கள்: இவ்வாறாக, “மனந்திரும்பி பிள்ளைகளைப் போல்” ஆகின்ற பெரியவர்கள் தேவனுடைய ராஜ்யம் சம்பந்தமான வெளிப்படுத்தலை பெற்றுக் கொள்கின்றார்கள். பார்க்கவும் *மத்தேயு 18:3.* இப்பொழுது அவருடைய பிள்ளைகளாக ஆகிவிட்டவர்கள் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் குடிமக்களாக இருப்பதற்கும், தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்வதற்கும் தாங்கள் படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை தெரிந்துகொண்டார்கள். நமது முந்தைய பாடங்களில் தேவனுடைய ராஜ்யத்தின் வெளிப்பாட்டைக் குறித்து போதுமான அளவுக்கு சொல்லிவிட்டோம். தேவன் நமக்குள் ஏற்படுத்தி வைத்திருக்கின்ற இயல்பான தேவைகளைப் பற்றிய வெளிப்பாட்டை மிகவும் பக்தி நிறைந்த மத அமைப்புகள் கூட இரகசியமாக வைத்திருக்கின்றன.





**III இயல்பான தேவைகள் :**

“ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளை யெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக் கிறார்.” *மத்தேயு 6:31,32.*

இயல்பான தேவைகளைக் குறித்த காரியங்களை சமூகவியல் வல்லுநர்களும் நன்றாக புரிந்துகொண்ட போதிலும், சிறு பிள்ளைகளுக்கு தாய்மார்களாய் இருப்பவர்களும் மார்க்கத் தலைவர்களும் இந்தக் காரியத்தைக் குறித்து பேசுவதில்லை. அவர்கள் சில சமயங்களில் இரகசியம் என்ற போர்வையை போர்த்தி பல விஷயங்களை மறைக்கும் மனநிலையிலேயே இருக்கின்றார்கள். விசேஷமாக, நம்மை தேவன் படைத்திருக்கும் விதத்தை பற்றிய உண்மைகளை அவர்கள் இப்படி மறைக்கிறார்கள். சிறுபிள்ளைகளை நாம் சாதாரணமாக கவனித்தாலே அவர்களுடைய இயல்பான தேவைகளை நம்மால் புரிந்துகொள்ள முடியும். பயனுள்ள வேலைகளை செய்து முடித்து, அதனிமித்தம் சந்தோஷப் படுவதற்காக அவர்கள் மேற்கொள்ளும் பல்வேறு முயற்சிகளை அவர்களுடைய பெற்றோரும், நண்பர்களும் கூட கண்டுகொள்வதில்லை, அவர்கள் செய்கின்ற சாதனைக்காக அவர்களுக்கு நெருக்கமான வர்களும், பிரியமானவர்களும் தங்களை எப்படி புகழ வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதை நம்மால் கவனிக்க முடியும். ஒரு சாதனையை செய்து முடிப்பதற்காக சிறுபிள்ளை செய்கின்ற வேலைகள், தன்னுடைய வழக்கமான வேலையில் பரபரப்பாக இருக்கும் அந்தப் பிள்ளையினுடைய தாய்க்கு எரிச்சல் உண்டாக்குவதாக இருக்கலாம். உலகெங்கிலும் இருக்கின்ற சிறு பிள்ளைகள் சாதனையாளர்கள் ஆவதற்கென்று கடுமையாக முயற்சித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

இதனால் தான் புகழ்ச்சிக்குரிய சாதனையை ஒரு இயல்பான தேவை என்று வகைப்படுத்துகின்றோம். சிறு பிள்ளைகள் ஒரு சாதனையை செய்து முடிக்கும் போது, மற்றவர்கள் அதை அங்கீகரித்து, தங்களைப் புகழ வேண்டுமென்று விரும்புகிறார்கள். இது அவர்களுக்கு மகிமையை கொடுக்கின்றது; இதன் காரணமாக மகிமையும் கூட தேவன் ஏற்படுத்தியுள்ள ஒரு இயல்பான தேவையாகின்றது. இது "உள்ளான மனிதனுக்குரிய" உயரிய தேவையாக இருக்கின்றது. ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவன் விசேஷித்தது அல்லவா? *மத்தேயு 6:25.* நன்மை, தீமை அறியும் அறிவை அடைந்துவிட்டதனால், மனுக்குலம் "ஆதாமுக்குள்" முழு திருப்தியை அடையவே முடியாது. "இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" என்று சொல்லப்பட்டிருப்பதால், நிறைவான **நம்பிக்கையை** கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கிறார்கள். *1 பேதுரு 1:7.* நம்பிக்கையே வாழ்வின் அமுதமாக இருக்கின்றது. *ரோமர் 8:22-25.*

எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் தேவன் ஏற்படுத்தியிருக்கின்ற இயல்பான தேவைகளை **அங்கீகரிக்காதவர்கள்** இயேசுவின் போதனைகள் பலவற்றை முழுமையாக புரிந்துகொள்ளமுடியாது. உண்மையில் பல வசனங்கள் இவர்களுக்கு இரகசியமானவைகளாகவே இருக்கின்றன. தயவு கூர்ந்து இந்தப் புத்தகத்தின் இரண்டாம் பாடத்தை திருப்பி பாருங்கள் . மனுக்குலத்துக்கு தேவன் ஏற்படுத்தியிருக்கின்ற இயல்பான தேவைகளை நிறைவு செய்யக்கூடியவைகளாக அவருடைய உடன்படிக்கைகள் இருந்தன என்று பழைய ஏற்பாடு தெளிவாக அறிவிக்கின்றது. இன்றைக்கும் கூட, எல்லா மக்களுடைய அடிப்படைத் தேவைகளை தேவன் சந்திக்கின்றார். அவரை மறுதலிக்கும் மக்களுக்கும் இந்த உதவியை அவர் செய்கின்றார். *அப்போ. 14:14-17.*





பின்வரும் பகுதி "மலைப்பிரசங்கம்" என்ற தலைப்பிலுள்ள எனது புத்தகத்தின் முதல் பாகத்தில், முதலாம் பாடத்திலிருந்து எடுத்தெழுதப் பட்டுள்ளது.

**எடுத்தெழுதப்பட்ட பகுதி**

மனிதனுடைய ஆவி மற்றும் சரீரத்தின் தேவைகளும், திறமைகளும் அவனுடைய சிறப்பம்சங்களாக இருக்கின்றன. இவையாவும் மக்களுக்குள் தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களுடைய விசேஷித்த குணங்களும் பல்வேறு செயல்பாடுகளும் முன்னேற்றம் அடையும்படி செய்கின்றன. பின்வரும் காரியங்கள் புதிதாய் பிறக்கும் குழந்தையோடு வருகின்றன:

1 வேறுபட்ட அளவுள்ள அறிவாற்றல். நாம் ஒவ்வொரு பகுதியிலும் சமமாக படைக்கப்பட்டிருக்கலாம், அல்லது சமமில்லாமல் படைக்கப்பட்டிருக்கலாம். மக்களுடைய அறிவாற்றல், தரத்தில் வேறுபடுகிறது என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.

2. நம்முடைய பெற்றோரிடம் இருந்து அடிப்படையாக நமது மாம்சத்திற்குரிய தன்மைகளை நாம் பெற்றுக்கொள்கிறோம்; நிறம், உருவம், முடி அமைப்பு போன்றவை.

3. **உணவு, பாதுகாப்பு, உடலுறவு, சமூகத்தில் மற்றவருடன் கூடிப்பழகும் இயல்பு, சாதனை மற்றும் மகிமை ஆகியவைகளை தேடும் தன்மை நமக்குள் இடம் பெற்றிருக்கின்றது. இவைகளையெல்லாம் நாம் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவசியம் நமக்கில்லை.**

4. ஒரு குழந்தை குறிப்பிட்ட திறமைகளோடு பிறக்கின்றது. அவர்கள் செயல்படுவதற்கு வேண்டிய சுய விருப்பமும், கற்பனை

செய்வதற்கும் தேர்ந்தெடுப்பதற்கும் வேண்டிய சுதந்தரமும், சக்தியும் அவர்களுக்கு இருக்கின்றன. அவர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆகின்றபோது அவர்களுடைய மனச்சாட்சியும் செயல்பட ஆரம்பிக் கின்றது. அவர்கள் தங்களை தாங்களே சோதித்துப்பார்க்கக்கூடிய திறமையையும் அவர்களுக்கு தேவன் கொடுத்திருக்கின்றார். எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் வாழ்கின்ற எல்லா மக்களும் இந்த இயல்புகளை பெற்றிருப்பதனால், தேவன் மனுக்குலத்துக்குக் கொடுத்திருக்கின்ற வடிவமைப்பிலேயே இவைகளை அமைத்திருக்கின்றார் என்று நாம் சொல்லலாம். **எடுத்தெழுதப்பட்ட பகுதியின் முடிவு.**

இயேசுவின் போதனையை நேரடியாக கேட்ட யூதர்கள், தங்களை தேவன் படைத்திருக்கும் விதத்திற்கு ஏற்ற தேவைகளை திருப்திப்படுத்தும் ஒரு திட்டத்தை அவருடைய ராஜ்யத்தில் வைத்திருக்கின்றார் என்பதை தெரிந்துகொள்ளவேண்டும் என்று இயேசு விரும்பினார். *மத். 6:25-34.* மத்தேயு தன்னுடைய சுவிசேஷ புத்தகத்தில் இயேசு மலையில் செய்த பிரசங்கத்தை, அநேகமாக இவைகள் பிரசங்கங்களாக இருக்கலாம், 5–7 வரை உள்ள அதிகாரங்களில் சபைகளின் பிரயோஜனத்திற்கென்று பதிவு செய்திருக்கின்றான். எல்லா மனிதர்களும் மாம்சத்தில் பிறந்தது முதல் – ஒரு வேளை தாயின் கருவில் கடைசி சில வாரங்கள் இருக்கும் போது முதற்கொண்டே தங்களுடைய இயல்பான தேவைகளை திருப்திப்படுத்திக் கொள்ள தேடுவதால் இந்த வெளிப்பாடு எல்லா மனிதர்களுக்கும் தேவைப்படுகின்றது. இந்த “உலக ஞானத்தின்படி” “ஞானிகளும் கல்வி மான்களும்’’ தங்களது பூமிக்குரிய தேவைகளை திருப்திப்படுத்திக் கொள்வதில் வெற்றியடைகிறார்கள். இருந்தாலும், இந்த திருப்தியை எதிர்காலத்திலும் தக்கவைத்துக்கொள்ளவேண்டும் என்று நினைத்து அதைப்பற்றி கவலைப்படுகிறார்கள். உண்மையில், சிலர் தங்களால் கட்டுப்படுத்த முடியாத இந்தக் காரியத்தை நினைத்துக் கவலைப்பட்டு,





அதனால் தாக்கப்பட்டு, உடல் ஆரோக்கியத்தையும் மன ஆரோக்கியத் தையும் கெடுத்துக்கொள்கிறார்கள். இயேசு தம்முடைய பேச்சை கேட்டுக்கொண்டிருந்தவர்களை பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்டார்: ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவன் விசேஷித்தது அல்லவா? *மத்தேயு 6:25.* இந்தப் பூமியில் வாழும் ஜீவாத்துமாவுடைய பாதுகாப்புக்கு, உணவு முக்கியமானதாக இருக்கின்றது. இயேசுவுக்கு இது தெரியும், ஆனாலும் நமது ஆவிகளுக்கு வேண்டிய மனரீதியான பாதுகாப்புக்கு, தேவனுடைய பிள்ளைகளாக நம்மை உருவாக்குகின்ற சக்தியை அடைவதற்கு பிரயாசப்படுவது அதிக அவசியம் என்பதையும் அவர் அறிந்திருந்தார். கிறிஸ்தவர்கள் பரலோகத்திலே தங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்துவைக்க வேண்டியது அவசியமானது. *மத்தேயு 6:19,20.* ‘‘மலைப்பிரசங்கம்’’, என்ற எனது புத்தகத்தின் மூன்றாம் பாகத்தில் “கோபத்திலிருந்து அன்பை நோக்கி வளருதல்” என்ற தலைப்பிலுள்ள ஐந்தாம் பாடத்தின் வரைபடத்தைப் பாருங்கள்.

நமக்குள் தேவன் ஏற்படுத்தியுள்ள இயல்பான தேவைகளை திருப்திப்படுத்துவதற்கு அவர் ஏற்படுத்தியுள்ள திட்டத்தை பற்றி இயேசு பிரசங்கித்த ராஜ்யத்தின் செய்தி, ஜீவப்பிரமாணமாக வெளிப்படையாக பிரசங்கிக்கப்பட்டிருக்கவில்லை. தமது ஊழியத்தைப் பற்றி அவர் தெரிவித்த வாக்கியம், “ஞானிகளும், கல்விமான்களும்” தங்களுடைய இயல்பான தேவைகளை திருப்திப்படுத்துவதற்கு தேவன் ஏற்படுத்தியுள்ள திட்டத்தில் கவனம் செலுத்தவேண்டுமென்று அவர் எதிர்பார்க்க வில்லையென்று தெளிவுபடுத்துகின்றது. அவர்கள் தங்களது தேவைகளை திருப்திபடுத்திக் கொள்வதற்கு பொருத்தமான ஒரு திட்டத்தை கண்டுகொள்வதால் அவர்கள் சுய திருப்தி அடையக் கூடும். செவிகொடுப்பவர்களுக்கே சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். *லூக்கா 9:5.* தங்களுடைய பூமிக்குரிய தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்காக

தினந்தோறும் போராடிக்கொண்டிருக்கும் மக்கள், செவிகொடுக்க விருப்பமுள்ளவர்களாக இருந்தாலும் இருக்கலாம். கனம், மகிமை மற்றும் சமாதானம் ஆகிய நம்முடைய உயரிய தேவைகளை திருப்திப்படுத்தும் நம்பிக்கையை நாம் எப்படி பெற்றுக்கொள்வது என்பதைப் பற்றி ஜீவப்பிரமாணம் தெரியப்படுத்துகின்றது. அதுமட்டுமல்லாமல், “ஆதாமுக்குள்” நமக்கு தேவைப்படுகின்ற உணவு, உடை, மற்றும் இருப்பிடம் ஆகியவைகளை திருப்திப்படுத்திக்கொள்வது பற்றியும் ஜீவப்பிரமாணம் தெரிவிக்கின்றது. அதோடு கூட நமது சரீரங்கள் பக்குவமடைவதால் நமது உடலுறவு தேவைகளை பற்றியும் இது தெரிவிக்கின்றது. ஆகையினால், நாம் “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும்” தேடினால் நமக்கு திருப்தி வரும் என்று இயேசு போதித்தார். *மத்தேயு 6:33.* “எவன் நன்மைசெய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும்” என்கின்ற நமது நித்திய நம்பிக்கையை இயேசு திரும்ப வரும்போது நிறைவுபடுத்துவார். *ரோமர் 2:10.* நமது உள்ளான மனிதன் நமது உயரிய தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்ளவே தேடிக்கொண்டு இருக்கிறான். *எபேசியர் 4:22-24.* தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கும் ஜீவப்பிரமாணத்துக்கு அப்பாற்பட்டு திருப்தியை தேடுவது நீதியான செயல் அல்ல. நம்மை திருப்திப்படுத்த சாத்தான் பல திட்டங்களை நமக்கு காண்பிக்கிறான். ஆனாலும், அவைகளின் முடிவு நமக்குத் திருப்தியைத் தராது. மாறாக, இச்சையை தான் உண்டாக்கும்.

தேவனுடைய ராஜ்யத்துக்கு உகந்த வாழ்க்கைத் தரத்தைப் பற்றி போதிப்பதற்காக பிரபலமானவனாகவும் ஐசுவரியவானாகவும் இருக்கின்ற நிலைமையை இயேசு அடிக்கடி பயன்படுத்தினார். எடுத்துக்காட்டாக, *லூக்கா 14:7-11* வரை உள்ள வசனங்களில் இருக்கையோடு சம்பந்தப்பட்டுள்ள மகிமையை அடையும்படிக்கு பந்தியில் முதன்மையான





இடங்களை தெரிந்துகொண்டவர்களுக்கு இயேசு புத்திமதி கூறினார். மகிமையையும், கனத்தையும் மற்றவரிடமிருந்து பெற்றுக்கொள்ள தூண்டுகின்ற ஒரு தேவையை தேவன் மனிதர்களுக்குள் ஏற்படுத்தியிருக்கின்றார் என்பதை இயேசு தெரிந்துகொண்டதால், முதன்மையான இடங்களைத் தெரிந்துகொண்டதற்காக அவர் அவர்களைக் கண்டிக்கவில்லை என்பதை தயவுகூர்ந்து கவனியுங்கள்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், ஒரு வாலிபன் இயேசுவை சந்தித்துப் பேசினான். இவன், தனது இயல்பான தேவைகளில் ஒன்றாயிருந்த, மாம்சத்திற்குரிய பாதுகாப்பை திருப்திப்படுத்திக்கொள்ளுவது எப்படி என்பதை கற்றுக்கொண்டவனாய் இருந்தான். ஆனால், அவனுக்கு இன்னமும் கவலை இருந்தது. “அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான்.” *மத்தேயு 19:16.* இந்த வாலிபன் தன்னுடைய அடிப்படைத் தேவைகளை திருப்திப்படுத்திக் கொண்டவனாய் மாத்திரமல்ல, தனது உயரிய தேவைகளாகிய கனத்தையும், மகிமையையும் கூட ஓரளவுக்கு பெற்றுக்கொண்டவனாகவே இருந்திருக்கின்றான் என்பது தெளிவாக விளங்குகின்றது. ஆயினும், மரணத்திற்கு பிறகு தன்னுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக என்ன செய்யவேண்டுமென்று இயேசுவிடம் கேட்கின்றான். துரதிர்ஷ்டவசமாக தன்னுடைய பாதுகாப்புக்காகவும் கனத்துக்காகவும் மகிமைக்காகவும் அவன் ஏற்கனவே என்ன திட்டமிட்டிருந்தானோ, அதனை தன்னுடைய நித்திய பாதுகாப்புக்காகவும், கனத்துக்காகவும் மகிமைக்காகவும் விட்டுவிட விருப்பமில்லாமல் போய் விட்டான். அந்த வாலிபன், தான் இரண்டு பாகங்களைக் கொண்டவனாக வாழ்வதை உணரவில்லை. *2 கொரி. 4:16-18.* அவனால் தன்னுடைய உடலுக்கு அப்பாற்பட்ட விதத்தில் தன்னை பார்க்கமுடியவில்லை. நமது உள்ளான

மனிதர்களாக ஆகிவிட்ட ஆவிகளுக்கு ''இயல்பான தேவைகள்'' இருக்கின்றன. நமது உடல்களை விட்டு நாம் வெளியேறினவுடனே நாம் "உள்ளான மனிதர்களாக" தான் இருக்கப் போகின்றோம் என்பதை பற்றி ஆவிக்குரிய தெளிவு நமக்கு இருக்க வேண்டும். தேவனிடம் திரும்பச் செல்லுகின்ற நம்முடைய ஆவி இதுதான். நமது இயல்பான தேவைகளை திருப்திப்படுத்துவதற்கு சாத்தான் ஏற்படுத்திவைத்திருக்கும் திட்டங்களை "ஜெயிப்பவன் எவனோ" அவனுக்கு முழுதிருப்தியை இயேசு கொடுப்பார். *1 யோவான் 2:15-17.* "உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்." *வெளி.12:9.* சாத்தான் "பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான்." *யோ. 8:44.* உலக நீதியும் கூட, பொய் பேசுவதை ஏற்றுக்கொள்வதில்லை.

*"மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள். வெளி. 12:11.*

இன்னொரு ஐசுவரியவான் இருந்தான். இந்தப் பூமியில் வாழும்போதே தன்னுடைய எல்லா இயல்பான தேவைகளையும் திருப்திப்படுத்திக்கொள்ள முடியும் என்று அவன் நினைத்தான். *லூக்கா 12:16-21.* அவன் பார்த்த "உலகப் பார்வையின்" படி அவனுடைய சரீரத் தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்காக அவன் தீட்டிய திட்டம் வெற்றிகரமாக முடிந்தது. இருந்த போதிலும், தன்னுடைய சந்தோஷத்தை நீடிக்கச் செய்வதற்கு அவன் மிகுந்த அக்கறையோடு திட்டம் தீட்டினான். தன்னுடைய தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதில் தான் சந்தோஷம் அடங்கியிருக்கிறது என்று நினைத்து, விளைந்ததை சேகரிப்பதற்காக





களஞ்சியங்களை இடித்து பெரிதாகக் கட்டினான். இப்படியிருக்கையில் அவனுடைய திட்டம் தோற்றுப்போன இடம் எது? நம்முடைய உயரிய தேவைகள் நம்முடைய ஆவிகளை சேர்ந்தவைகள் என்பதை அவன் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அநேக மக்களை போல, அவனும் தன்னுடைய சரீரத்தை விட்டு வெளியேறின பிறகு தனது ஆவியின் தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்கு எந்த திட்டமும் இல்லாதவனாய் இருந்தான். அவன் தனக்கென்று களஞ்சியங்களைக் கட்டினான். ஆனால் அவைகளைத் தன்னோடு கொண்டுசெல்ல முடியவில்லை. *1 தீமோ. 6:6-10.* மாம்சத்திற்குரிய அவனுடைய மேன்மைகளை நீக்கிவிட்டால் அவனுடைய அடையாளம் என்னவாக இருக்கும்? உண்மையில், அவனுடைய மரணத்திற்கு பிறகு தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள அவனுக்கு வழியே இல்லை. தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான். *லூக்கா 12:21.* "ஆதாமுக்குள்ளும்" "கிறிஸ்துவுக்குள்ளும்" வாழ்கின்ற நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற அடையாளத்தை பெற்றிருக்கிறோம். அதனால், இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையும் உண்டாகும் என்று சொல்லப்படும் வசனத்தின்மீது நமக்கு இருக்கும் விசுவாசம் குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. *1 பேதுரு 1:7.* சாத்தானை ஜெயிக்க முயற்சித்துக்கொண்டிருக்கும் ஒரு கிறிஸ்தவனுக்கு அடையாளம் முக்கியமானதாக இருக்கின்றது போலவே, இந்தச் சமுதாயத்தில் நாம் வாழும் வாழ்க்கைக்கு அடையாளம் முக்கியமானதாக இருக்கின்றது. உயிர்த்தெழுந்திருக்கப் போகும் நம்முடைய "உள்ளான மனிதர்களுக்கும்" அடையாளம் இன்றியமையாதது.

**IV பொருளாசை :**

"பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன்

அல்ல என்றார்.” *லூக்கா 12:15.*

நம்முடைய தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்காக தேவன் ஏற்படுத்தியுள்ள திட்டத்தை தகர்க்கும்படி சாத்தான் ஏற்படுத்தியுள்ள திட்டத்தோடு இந்தத் தலைப்பு நெருக்கமானதாக இருக்கின்றது. ப்ளியோனெக்ஸியா (pleonexia) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து “பொருளாசை” என்ற வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த கிரேக்க வார்த்தை இரண்டு வார்த்தைகளை உள்ளடக்கியது: 1. ப்ளியோன் (Pleon) இன்னும் 2. எக்கோ (Echo) பெற்றுக்கொள்ள, பொருளாசை “மாம்சத்தின் இச்சை” வகையினை சேர்ந்ததாக இருப்பதனால், தவறான காரியத்தை குறிப்பிடுவதற்காக இது எப்பொழுதும் பயன்படுத்தப்படுகிறது. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக உயிர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் கூட, நாம் இன்னமும் “ஆதாமுக்குள்” இருப்பதனால், “இச்சைக்கு வழி உண்டாக்கும் நமது சுபாவத்தை” குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். பார்க்கவும் *ரோமர் 13:14; கலாத்தியர் 5:16,17; கொலோசெயர் 2:23.* நமது மாம்சத்தையும், அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைகின்ற செயலானது நமது சுத்திகரிப்பிற்கு அல்லது நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஓர் ஆதாரமாக இருக்கின்றது. *கலாத்தியர் 5:24.* அதைக் கட்டிப்போட வேண்டும் என்பதே இதின் அர்த்தம். அதாவது, அதைச் சக்தியற்ற ஒரு நிலைக்கு கொண்டுவரவேண்டும். தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தினுடைய சுவிசேஷத்தை தவிர்த்து, வாழ்க்கையைக் குறித்த மற்ற எல்லாப் போதனைகளுமே “மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது.” *கொலோசெயர் 2:23.*

ஒரு கிறிஸ்தவன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படும்போது, அவன் சுத்திகரிக்கப்படுவதில் தடை ஏற்படுகிறது. *யாக்கோபு 1:14.* அவன் / அவள் தன்னுடைய தீய விருப்பங்களுக்கு இடமளிப்பவனாக/இடமளிப்பவளாக இருக்கின்றான்/ள்.





நம்முடைய தீய விருப்பம் நாம் அளிக்கும் இடத்தில் வந்து சேர்ந்து, இரண்டும் “ஒன்றாகிப் போனால்” “இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.” *யாக்கோபு 1:15.* யாக்கோபு இதை கிறிஸ்தவர்களுக்கு எழுதினான்; இதன் காரணமாகவே, தேவனுடைய பிள்ளைகளை சிறைப்பிடிக்கும்படி சாத்தான் “தனது ஊழியக்காரர்களை” பயன்படுத்தி, “ஒரு முறை கிருபை கிடைத்துவிட்டால், எப்பொழுதுமே அந்தக் கிருபை பலனளிக்கும்” என்று போதிக்கச் செய்கின்றான். *2 கொரி. 11:15.*

“விக்கிரகாராதனையான பொருளாசை”, *கொலோசெயர் 3:5; மத்தேயு 6:24*இல் பணத்தைப் பற்றி இயேசு இதைத்தான் தெரியப் படுத்துகிறார். நமக்குள் தேவன் உருவாக்கியுள்ள இயல்பான தேவைகளைக் குறித்து 25ஆம் வசனத்தில் இயேசு அறிமுகப்படுத்தியதை தயவுகூர்ந்து கவனியுங்கள். மக்கள் தங்கள் தேவைகளை திருப்திப்படுத்திக் கொள்ள **தேவனை அல்லது உலகப் பொருட்களை** சார்ந்து கொள்கிறார்கள். மக்கள் தங்களுடைய சரீரப் பாதுகாப்புக்காக செலவு பண்ணுவதற்கு போதுமான பணம் இல்லையே என்று கவலைப்படுகிறார்கள். நாம் “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும்” தேடுகின்ற வரையிலும் கவலைப்படக்கூடாது என்று இயேசு சொன்னார். மெரிம்நாவோ (Merimnao) என்ற கிரேக்க வார்த்தையை *மத்தேயு 6:25,27,28,31,34* வசனங்களில் இயேசு பயன்படுத்தினார். இதுவே “கவலை” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நாம் எதிலும் கவனம் செலுத்தக் கூடாது என்று இயேசு சொல்லவில்லை. நமது கவலைகள் தான் அவரை சஞ்சலப்படுத்துகின்றன. கவலையால் தாக்கப்பட்டு அதில் மூழ்கிப் போகாதபடிக்கு கிறிஸ்தவர்கள் இயேசுவையே சார்ந்திருக்கிறார்கள். *1 தெசலோனிக்கேயர் 4:11,12.*

கவலை நிறைந்த மக்கள் தங்களுடைய இயல்பான தேவைகளை திருப்திப்படுத்துவதற்கு தவறான திட்டங்கள் மீது நம்பிக்கை வைத்து அவைகளைத் தேர்ந்தெடுக்கக் கூடும். அவர்கள் தேர்ந்தெடுப்பது அவர்களுடைய ஒரு தேவையை திருப்திப்படுத்தி மற்றொன்றை தடைப்படுத்துவதாக இருக்கலாம். தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தில் நாம் வாழ்கின்ற வாழ்க்கை, தேவன் நமக்குள் ஏற்படுத்தியிருக்கின்ற எல்லாத் தேவைகளையும் குறித்து நம்பிக்கையை நிலைக்கச் செய்வதாக இருக்கின்றது. இயேசு போதித்த தேவனுடைய திட்டங்களில் நம்மை திருப்திப்படுத்தக்கூடிய நம்பிக்கை இருக்கின்றது. இது இக்காலத்தில் கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையை ஊக்குவிப்பதாக இருக்கின்றது. மக்கள் தங்களால் மாற்றமுடியாத காரியத்தைக் குறித்து அனுதினமும் கவலையில்லாமல் வாழ்வதற்கு அவர்களுக்கு வல்லமை தேவைப்படுகின்றது. பொருளாசை உள்ளவர்கள் எல்லாவற்றையும் குறித்து கவலைப்படுகிறார்கள். எப்படியிருந்தாலும், அவர்களுடைய மிகப்பெரிய பிரச்சனை பொருளாசைதான். பொருளாசை விக்கிரக ஆராதனையாக இருக்கின்றது. *கொலோசெயர் 3:5.* உலக நீதியும் பொருளாசையைத் தவறு என்று தான் சொல்லுகிறது. ஆயினும் விக்கிரக ஆராதனையானது சில தேசங்களில் கலாச்சாரமாகவே இருந்து வருகிறது. மக்கள் தங்களுடைய தேவைகளுக்கான திட்டங்களை வைத்திருக்கும் தெய்வங்களாகவே விக்கிரகங்களை பார்க்கின்றார்கள்.

பணம் எப்படி ஒரு விக்கிரகம் ஆக முடியும்? பணத்துக்காக நாம் கொண்டுள்ள பேராசை ஒரு விக்கிரகம் ஆகலாம் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். பணம் என்ற அர்த்தம் தரக்கூடிய "உலகப் பொருள்" என்ற வார்த்தையை இயேசு பயன்படுத்தினார். மக்கள் கொண்டுள்ள





பண ஆசை "பூமியிலிருக்கும் பொக்கிஷங்களை" அர்த்தப்படுத்துகின்றது. தேவனிடம் அன்புகூருவது "பரலோகத்தில் உள்ள பொக்கிஷங்களோடு" சம்பந்தப்பட்டிருக்கின்றது. பார்க்கவும் *மத்தேயு 6:19-24.* இரண்டில் ஏதோவொன்றின் மீது மனிதனுடைய இருதயம் இருக்கின்றது. மக்கள் பணத்தின் மீது ஆசைப்படுகிறார்கள். ஆனால் ஏன்? இந்த உண்மையை ஆழ்ந்து யோசியுங்கள்: "மக்கள் தங்களுடைய இயல்பான தேவைகளை திருப்திப்படுத்துவதற்கு எந்த வகையிலாவது உதவுகின்ற நபரையோ அல்லது பொருளையோ நேசிக்கின்றார்கள்." எடுத்துக்காட்டாக, நாம் ஏன் நம்முடைய பெற்றோரிடம் அன்பு கூருகிறோம்? நமது வாழ்வில் ஒரு சந்தர்ப்பத்தில் நம்முடைய தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்காக நாம் அவர்களை சார்ந்து இருந்தோம். நம்முடைய உடல்களுக்கும், மனங்களுக்கும் வேண்டிய பாதுகாப்பைத் தருவதற்காக இரவும், பகலும் வேலை செய்தவர்கள் பெரும்பாலும் நமது தாய்மார்கள் தான். சாதிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு நாம் தேர்ந்தெடுத்த பயிற்சிகளை செய்வதற்கு நமக்கு ஒத்துழைப்பு கொடுத்து மனதாரப் பாராட்டியதும் அவர்கள் தான். நாம் நம்முடைய குறிக்கோள்களை அடையமுடியாமல் தோல்வியடைந்த சமயங்களிலும் நம்மைத் தேற்றியதும் அவர்கள் தான். தங்கள் தாயை நேசிக்காதவர் யார்? தேவன் நமக்குள் ஏற்படுத்தியுள்ள தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்கு தேவன் அல்லது உலகப் பொருள் என்ற இரண்டில் ஒன்றை தேர்ந்தெடுக்கும்படி இயேசு சொன்ன போது, இந்த சிந்தனைகள் அவருடைய மனதில் இருந்திருக்கலாம்.

நம் மனதில் மதிப்பு வாய்ந்தவைகளாக நாம் நினைக்கும் காரியங்களில் எப்படி பண ஆசையும் ஒன்றாக இருக்கிறது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும். நம் சிறு வயதில் நம்முடைய இயல்புக்கு ஏற்றபடி தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்ள நாம் தேடித் திரிந்தோம்.

நாம் திருப்தி அடையாத போது, அதிலும் உணவு விஷயத்தில் திருப்தி அடையாத போது நாம் துக்கமடைவோம். நாம் வளர்ந்து பெரியவர்களாகி, நமது குடும்பத்தின் பொருளாதார நிலைமையைக் குறித்து அதிகமாய் தெரிந்துகொள்வதனால், உணவு தட்டுப்பாட்டுக்கு பணமே காரணம் என்பதை தெரிந்துகொள்கின்றோம். குடும்ப விவாதங்களில் பணமும், தேவைகளும் அடிக்கடி தவிர்க்க முடியாத தலைப்புகளாக இருக்கின்றன. இதன் காரணமாக, குடும்பத் தேவைகள் சந்திக்கப்பட முடியாத சூழ்நிலை ஏற்படுகின்ற போது அல்லது அப்படி ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று தெரிகின்ற போது குடும்ப விவாதத்தில் பணத்தைப் பற்றியும், அதன் குறைவைப் பற்றியும் தான் அதிகம் பேசப்படுமென்று, பிள்ளைகள் புரிந்துகொள்ளுகிறார்கள். இது போன்ற "வாழ்க்கைப் பெட்டியில்" வளருகின்றவர்கள், வெகு எளிதில் தேவனை விட பணத்திற்கு அதிக முக்கியத்துவம் தந்துவிடுகிறார்கள். இந்த உலக மக்களுடைய பக்தி தேவன் மீது இல்லாமல் பணத்தின் மீது வந்து விடுவது நாம் எளிதில் பார்க்கக்கூடிய ஒரு காட்சியாக இருக்கின்றது. அவர்கள் மதிப்புள்ளவைகளாக நினைக்கும் காரியங்கள் நீதியின்படி இருப்பதில்லை. வேதத்தை ஆழ்ந்து படிப்பதன் மூலமாக கிறிஸ்தவர்கள் தங்கள் பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியும். இது நம்முடைய விசுவாசத்தை ஆழமானதாகவும், அகலமானதாகவும் ஆக்குகின்றது. தேவன் மீது நாம் கொண்டுள்ள அன்பை விசுவாசமே பெலப்படுத்துகின்றது.

கிறிஸ்தவ பெற்றோர் இது போன்ற பிரச்சனையை *மத்தேயு 6:25-34* வசனங்கள் மீது விசுவாசம் வைப்பதன் மூலம் சிறிது சிறிதாக தீர்த்துக்கொள்ள முடியும். இயேசுவின் போதனைகளை சார்ந்து கொள்ள மனதில்லாத மக்கள் தங்கள் "களஞ்சியங்களை பெரிதாக" கட்ட முயற்சிக்கிறார்கள். பொருட்கள் தங்களை சந்தோஷப்படுத்தும் என்று





நினைப்பதினால், மக்களுடைய பொருளாசையைக் குறித்து இயேசு பேசினார். இச்சையை திருப்திப்படுத்தவே முடியாது. நமது இயல்பான தேவைகளை திருப்திப்படுத்துவதின் பலனாக சந்தோஷம் உண்டாகின்றது. நாம் சந்தோஷத்தை தேடுவதில்லை. அது திருப்தியின் பின்விளைவாக வருகின்றது. ஒரு கிறிஸ்தவன் சந்தோஷம் இல்லாமல் இருக்கும்போது, தன்னுடைய எந்தத் தேவை அல்லது தேவைகளை திருப்திப்படுத்திக் கொள்ளும் நம்பிக்கை இல்லாதிருக்கிறது என்பதை அடையாளம் காணவேண்டியது அவசியம். ஓர் இயல்பான தேவையை திருப்திப்படுத்திக் கொள்ளும் நம்பிக்கை இல்லாமற்போவதன் விளைவாகத் தான் அநேக மக்களுக்குள் கவலை உண்டாகின்றது.

**V அன்பு :**

"ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்." *யோ. 14:23.* பார்க்கவும் *1 யோவான் 4:13-21.*

நீதிநெறியின்படி மனஉறுதியோடு வாழ்பவர்களை மக்கள் விரும்புகிறார்கள். நீதிநெறி கோட்பாடுகளை இயேசு போதித்தார். அதன்படி வாழ்ந்தும் காட்டினார். அவர் ஜீவ ஒளியாக இருக்கின்றார். "சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப் படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான்." *யோவான் 3:21.* தேவன் அன்பாகவே இருக்கிறார். நாம் தேவனை அவருடைய ராஜ்யத்தை விட்டு தனியே பிரிக்க முடியாது. அப்படிப்போல, அவருடைய ராஜ்யத்திற்குரிய ஜீவப்பிரமாணத்திலிருந்து அன்பையும் பிரிக்க முடியாது. இயற்கை நியதியைப் போல ஜீவப்பிரமாணமும், வளர்ச்சி நிகழ்வதை விவரிக்கின்றது. அவர் நமது ஆவிகளை எப்படி

வடிவமைத்திருக்கிறார் என்று ஜீவப்பிரமாணம் விவரிக்கின்றது. நாம் அன்புகூருகின்ற விதமாகவே வடிவமைக்கப்பட்டிருக்கிறோம். நமது "உள்ளான மனிதர்கள்" உருவாக்கப்பட்டிருக்கின்ற விதத்தோடு பொருந்தாத செயல்தான் வெறுப்பது என்பது. பகைப்பது நீதிக்கு விரோதமானது. தேவனுடைய மக்களுக்குள் அவருடைய ராஜ்யம் இருப்பது கட்டாயமானால், யோவான் எழுதின தரமான அன்பும் குறிப்பிட்ட அளவுக்கு நமக்குள் இருக்க வேண்டியது கட்டாயம் தான். பகைவர்களை நேசிக்க கற்றுக்கொள்வது தான் கிறிஸ்தவர்களுடைய மிக உயர்ந்த குறிக்கோளாக இருக்கின்றது. இது அவரவர் விருப்பத்தைச் சார்ந்த குறிக்கோள் அல்ல. அன்பு கூர கற்றுக்கொள்வதற்கு சரியான வழி எதுவென்றால், அன்பை செயல்முறையில் காண்பிப்பதுதான். *மத்தேயு 5:44-48; 7:24; 1 யோவான் 2:3-6.* மற்றவர்களோடு கலந்து வாழ்கின்ற நமது வாழ்க்கை நீதிநெறியின்படி இருக்க வேண்டுமானால், நாம் நமது அன்பை செயல்முறையில் காண்பிக்க வேண்டும். மற்றவர்களிடம் நாம் அன்புகூராமல் இருப்பதற்காக தேவனிடம் மன்னிப்பு கேட்டு வேண்டுதல் செய்வதனால், நம்மீது அவருடைய அன்பு அதிகரிக்காது. *2 பேதுரு 1:7.* விசுவாசத்தைப் போல அன்பும் நம் நடத்தையில் வெளிப்படவேண்டும்.

நமது பெரும்பாலான தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்கு உதவி செய்யும்படி நாம் பெற்றோரை சார்ந்துகொள்வதனால், அவர்களிடம் அன்புகூருகிறோம். குறிப்பிட்ட அளவுக்கு கனத்தையும், மகிமையையும், சமூகபாதுகாப்பையும் நமக்குத் தந்து, அதோடு கூட நமது உடலுறவுத் தேவைகளையும் திருப்திப்படுத்துவதனால், தமது வாழ்க்கைத் துணையிடம் நாம் அன்புகூருகிறோம். தங்களுடைய இயல்பான தேவைகள் எல்லாவற்றையும் திருப்திப்படுத்த, தேவன் தருகின்றவைகள் போதுமென்று அவரைச் சார்ந்துகொள்பவர்கள் அவரிடம் அன்புகூருகிறார்கள்.





"ஆதாமுக்குள்ளான" நமது தேவைகளுக்காக இயற்கையின் நியதிகளையும், உள்ளான மனிதனுடைய தேவைகளுக்காக ஆவிக்குரிய பிரமாணங்களையும் அவர் கொடுத்திருக்கின்றார். தேவன் நம்மை எப்படி படைத்திருக்கிறார், ஏன் படைத்திருக்கிறார் என்பவைகளைப் பற்றிய சத்தியத்தை விசுவாசிக்காமல், அவரிடம் அன்புகூருகின்றோம் என்று சொல்லுவது பொய்யாகும். தேவனுடைய குடும்பத்திலுள்ள சகோதர, சகோதரிகளிடம் அன்புகூருவதாக சொல்லுகின்ற ஒரு கிறிஸ்தவன், நீதிநெறியின்படி அவர்களுடன் பழகாவிட்டால், அவன் பொய்யனாய் இருக்கிறான். பார்க்கவும் *1 யோவான் 4:19-21; வெளி. 21:8.* "கொரிந்தியருக்கு எழுதப்பட்ட நிருபங்கள்" என்ற புத்தகத்தின் நாலாம் பாகத்தில்"மிகச் சிறந்த வழி" என்ற தலைப்பிலுள்ள எட்டாம் பாடத்தைப் பாருங்கள். "யாக்கோபு, பேதுரு மற்றும் யோவான்" ஆகியோரால் எழுதப்பட்ட நிருபங்கள் என்ற எனது புத்தகத்தின் மூன்றாம் பாகத்தில், "பூரணப்படுத்தப்பட்ட அன்பு" என்ற நான்காம் பாடத்தையும் பாருங்கள், இந்த எல்லா புத்தகங்களையும் www.kingdomofchrist.info என்ற என்னுடைய இணையதளத்தில் ஆங்கிலத்திலும், தெலுங்கிலும் நீங்கள் பார்க்கலாம்.

### VI சுவிசேஷம் அறிவித்தல் :

நமது இரட்சகரும் அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் அவருடைய ஊழியத்தில் சேர்ந்துகொள்வதின் மூலம், அவர் மீது நமக்கு இருக்கும் அன்பை காண்பிக்கிறோம். கிறிஸ்தவர்களுடைய ஆவிகளைப் போலவே, தேவனுடன் வாழும் வாய்ப்பை இழந்துபோன நிலைமையில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஆவிகளும் தேவனிடமிருந்து வந்தவைகள் தான். அவர்களுடைய ஆவிகளும் "தேவனுடைய சாயலின்படி"

உண்டாக்கப்பட்டவைகள் தாம். *யாக்கோபு 3:9.* அவர்கள் தற்பொழுது எந்தக் கலாச்சாரத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்களோ, அந்தக் கலாச்சாரம் அவர்களுடைய ஆவிகளிலும் பதிந்துபோய் இருக்கின்றது. இந்த உலகத்திலுள்ள பெரும்பாலான மக்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள். நல்லவர்கள் தங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நன்மை செய்கிறார்கள். கிறிஸ்தவர்கள் இவர்களை விட ஒருபடி மேலே இருக்கிறார்கள்; நாம் மற்ற யாவரிடமும் பழகுவதில் நீதியும் நியாயமும் உள்ளவர்களாய் இருக்கிறோம். கிறிஸ்தவர்களைப் போல உலக மக்களும் "நன்மை தீமை பற்றி அறியும் அறிவை" பெற்றிருக்கிறார்கள். அவர்கள் நன்மை என்று நம்புகிறவைகளை செய்யாமற்போனால், அவர்களுடைய மனச்சாட்சி அவர்களை குற்றப்படுத்துகின்றது. அவர்களுடைய உள்ளான மனிதர்களுக்கு தேவையாய் இருக்கின்ற கனத்தையும், மகிமையையும் நிறைவாய் அடைய முடியாதபடி குற்ற உணர்வு அவர்களுக்கு இடையூறாய் இருக்கின்றது. உலக மக்கள் தொகையில் ஏராளமானவர்கள் தங்களுடைய நடத்தையின் நிமித்தம் குற்ற உணர்வினால் தாக்கப்படாதபடிக்கு, தங்கள் மனச்சாட்சியில் சூடுண்டவர்களாய் இருக்கிறார்கள். *1 தீமோ. 4:1.* "அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து; உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள்." *எபேசியர் 4:18,19.*

"உலக ராஜ்யத்திலுள்ள" மக்கள் தங்களுடைய தேவைகளான கனத்தையும், மகிமையையும் திருப்திப்படுத்திக்கொள்வதற்கு ஏதேனும் சாதிக்க வேண்டியிருக்கின்றது. அதற்கு அவர்கள் தங்கள் சரீரங்களையும் மூளைகளையுமே சார்ந்திருக்கிறாகள். இது குறிப்பிட்ட காலத்திற்கு





பயனளிக்கலாம். எப்படியிருந்தாலும், "மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே." *1 பேதுரு 1:24,25.* ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று" கர்த்தர் விரும்புகிறார். *2 பேதுரு 3:9.* "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும்," தேவன் சித்தமுள்ளவரா யிருக்கிறார். *1 தீமோத்தேயு 2:4.* ஒருவன் தீயில் அகப்பட்டு அழிவதை பார்க்கின்றவன் அவனைக் காப்பாற்ற தனக்கு சக்தியிருந்தும் காப்பாற்றாமல் வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நிற்பதை இந்த உலக நீதிகூட சரி என்று ஒப்புக்கொள்வதில்லை. வயதில் பெரியவர்களாய் இந்த உலகில் வாழ்கின்றவர்கள் சுவிசேஷத்தினால் இரட்சிக்கப்படாவிட்டால், நரகத்திற்கு தான் போவார்கள் என்று கிறிஸ்தவர்களாகிய நாம் புரிந்துகொள்கிறோம். நமது நம்பிக்கையை அவர்களோடு பகிர்ந்து கொள்ளாமற்போனால், அது நியாயமாகுமா? "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும்" இயேசுவோடு கிறிஸ்தவர்கள் ஒன்று சேர்ந்து செயல்பட்டால், அன்பு என்ற நற்பண்பை செயல்படுத்தவும், அன்பாகவே ஆகவும் நமக்கு வழி உண்டாகும். நாம் அன்பாக ஆகிவிட்ட பிறகு நமது நம்பிக்கையை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுவோம். இயேசு கிறிஸ்து செய்த தேவனுடைய சுவிசேஷ ஊழியம் (God's Evangelism by Jesus Christ) என்ற எனது புத்தகத்தைப் பாருங்கள்; மேலும், தேவனுடைய ராஜ்யம் (The Kingdom of God ) என்ற தலைப்பிலுள்ள என் புத்தகத்தின் ஐந்தாம் பாகத்தில் "சுவிசேஷம் அறிவித்தல்" என்ற 14-ஆம் பாடத்தையும் பாருங்கள்.

“இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும்” தற்பொழுது நடைபெற்று வரும் தேவனுடைய ஊழியத்தைப் பற்றிய குறிப்புகளை பின்வருமாறு காணலாம். *லூக்கா 19:10.*

| ஊழியம் | வசனங்கள் |
|---|---|
| தேவன் இயேசுகிறிஸ்து மூலமாய் செய்த ஊழியம் | *யோவான் 6:37-40* |
| தமது ஊழியத்தைக் குறித்து இயேசு சொன்ன வாக்கியம்: “தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்.” | *லூக்கா 4:18,19* |
| இயேசு பிரசங்கித்து வந்த சுவிசேஷம் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியதாகவே இருந்தது. | *லூக்கா 4:43* |
| நமது கர்த்தர் அப்போஸ்தலருக்கும் மற்றவர்களுக்கும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து போதித்தார். | *அப்போஸ்தலர் 8:12;20:25* |
| தமது ஊழியத்தைப் பற்றி இயேசு அப்போஸ்தலருக்கு சொன்ன வாக்கியம்: “நீங்கள்...பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.” | *அப்போஸ்தலர் 1:6-8* |
| புறஜாதிகளிடத்திற்கு போகும்படி அப்போஸ்தலனாகிய பவுலிடம் இயேசு ஒப்படைத்த ஊழியப் பொறுப்பு. | *அப்போஸ்தலர் 26:16-18* |
| சபைக்கு கொடுக்கும்படி அப்போஸ்தலர்களிடம் இயேசு ஒப்படைத்த ஊழியப் பொறுப்பு. | *மத்தேயு 28:18-20* |
| ஒரு தனிப்பட்ட அங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஊழியப் பொறுப்பு: “உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்.” | *1 பேதுரு 3:13-16* |





**வசதி குறைந்த நிலையில் உள்ளவர்களை அழையுங்கள்**

“நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்.” *லூக்கா 14:13,14.*

இயேசு சவால் விடுகின்ற காரியத்தில் நீதி இருப்பதாக தெரிவிக்கின்ற அவருடைய ஞானத்தைக் குறித்து சிலர் கேள்வி கேட்கக் கூடும். நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஆவிக்குரிய வளர்ச்சியை விட உயர்ந்த அளவு வளர்ச்சி உடையவர்களுக்கு இது சாத்தியமாகலாம். மிகக் கடினமானதென்று நாம் சொல்லக்கூடும்; உலக கலாச்சாரத்துக்கு அப்பாற்பட்டதாகவும் இது நமக்குத் தோன்றலாம். ஞானிகளும் கல்விமான்களும் சார்ந்திருக்கின்ற பிரிவில் நாமும் இருப்பதாக நினைத்துக் கொண்டால், அப்படித் தான் தோன்றும். “தேவனாலேமாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை”

ஏற்றுக்கொள்ளுகிறவர்களாக நீங்கள் (கிறிஸ்தவர்கள்) இருந்தால், அப்படித்தான் தோன்றும். *யோவான் 5:44.* இயேசு கிறிஸ்து போதித்ததும், வாழ்ந்து காட்டியதும், தமது மரணத்தின் மூலம் விளங்கப்பண்ணினதுமான உயர்தரமான அன்பை, நாம் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கவில்லையென்றால், அப்படித்தான் தோன்றும். *1 யோவான் 3:16.* பேராசையுள்ளவர்களாக வாழுகின்ற மக்களுக்கு இந்தக் கட்டளை கடினமானது தான். ஞாயிற்றுக்கிழமை காலையில் "பிரசங்கமேடையில் நின்று பிரசங்கியர்" சொல்லுவது போன்ற ஒரு புத்திமதியாய் மாத்திரம் இது இல்லை என்பதை கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இயேசு இந்த நீதிநெறிகள் எல்லாவற்றையும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த தமது பிரசங்கத்தில் சேர்த்துப் பிரசங்கித்தார்.

கிறிஸ்தவர்கள் விருந்து பண்ணும்போது ஏழைகளை அழைக்க வேண்டுமென்று சொல்லப்பட்ட சூழ்நிலையை கவனியுங்கள். தயவுகூர்ந்து வாசிக்கவும் *லூக்கா 14:7-11.* பரிசேயரில் தலைவனாகிய ஒருவனுடைய வீட்டிலே இயேசு விருந்துக்கு போயிருந்தார். "விருந்துக்கு அழைக்கப் பட்டவர்கள் பந்தியில் முதன்மையான இடங்களைத் தெரிந்துகொண்டதை அவர் பார்த்து, அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்." "இயேசுவின் உவமைகள்" என்ற தலைப்பிலுள்ள என் புத்தகத்தின் மூன்றாம் பாகத்தில் "மகிமையடைதல்" என்ற நான்காம் பாடத்தை தயவுகூர்ந்து பாருங்கள். கனத்திற்குரிய இடத்தை அவர்கள் விரும்பியதற்காக இயேசு அவர்களை கடிந்துகொள்ளவில்லை. மகிமையைத் தேடுகின்ற செயல் அவர்களுக்கு இயல்பிலேயே தேவனால் படைக்கப்பட்டிருந்தது என்று அவர் தெரிந்துகொண்டார். உண்மையில், அவர்கள் தங்களுக்குச் சமமானவர்களால் கனப்படுத்தப்படும் தகுதியுள்ளவர்களாய் இருந்தால், முதன்மையான இடத்துக்கு மற்றவர்கள் இவர்களை அழைப்பதற்கு





எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று அவர்களுக்கு போதித்தார்.

இயேசு *லூக்கா 14:12-14* வசனங்களில் வாழ்க்கையின் அடிப்படைக் கொள்கையை ஒருபடி மேலே கொண்டுசென்றார். இயேசுவின் ஊழியத்துக்கு ஏற்ற அடிப்படைக் கொள்கைகளுக்கு கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிகிறார்கள். நாம் செய்யும் உதவிகளுக்கு பதில் நன்மை செய்ய முடியாத மக்களுக்கு நாம் ஊழியம் செய்கின்றோம். பரிசேயரில் தலைவனாகிய ஒருவன் தன்னோடு வேலை செய்பவர்களை விருந்துக்கு அழைத்திருந்தான். கிறிஸ்தவர்கள் செய்யும்படி ஒரு பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. லேவிய ஆசாரியத்துவத்தின் கீழ் வாழ்ந்தவர்கள் இதைச் செய்ய தயாராக இல்லை. இயேசு மத்தேயு சுவிசேஷத்தின் மூலமாக கிறிஸ்தவர்களுக்கு இவ்விதமாக சொன்னார்: "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." *மத்தேயு 5:20.* இயேசு தம்மை போல கிறிஸ்தவர்களும் தங்களைத் தாங்களே ஒப்புக்கொடுக்கும்படி கட்டளையிடுகிறார்: "நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்." *1 பேதுரு 2:20,21.* ஒப்புக்கொடுப்பது நீதியுள்ள நடத்தையாக இருக்கிறது. ஒப்புக்கொடுக்க விருப்பமில்லாமல் இருப்பது அநீதியாயிருக்கிறது. எப்படியிருந்தாலும், உலக மக்கள் இதை ஒத்துக் கொள்வதில்லை.

"எல்லா மக்களையும்" தேவனிடமிருந்து வந்த ஆவிகளைப் பெற்ற மக்களாக ஏற்றுக்கொள்வது தான் இந்தத் தலைப்பின் முக்கிய அம்சமாக இருக்கின்றது. இது நம்முடைய "உள்ளான மனிதர்களை" ஒப்புக் கொடுப்பதைப் பற்றியது. இந்த முக்கிய அம்சத்தின்படி, பாரபட்சம் காண்பிப்பது அநீதியுள்ள நடத்தையாகும். "தேவனுக்குக் கீழ்ப் படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்." *யாக்கோபு 4:7.* இந்த விஷயத்தில் தேவனுடைய ராஜ்யத்திற்குள் நாம் எப்படி பொருந்துகிறோம் என்பதைப் பற்றியதாக இது இருக்கின்றது. நாம் நற்கிரியைகளை செய்யும்படி கிருபையால் இரட்சிக்கப்பட்ட பாவிகளாய் இருக்கிறோம். *எபே. 2:8-10* வரை உள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு" இருக்கிறோம் என்று 10ஆம் வசனம் சொல்வதை சிலர் வழக்கமாக கண்டு கொள்வதில்லை. நாம் இயேசுவின் சீஷர்களாக இருக்கிறோம். அவருடைய வழிநடத்துதல் இல்லாமல் ஜீவனுக்குப் போகும் வழியை நம்மால் தெரிந்துகொள்ள இயலாது. கிருபையால் நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம். நாம் கிருபையால் பெற்றுக்கொண்ட புத்திர சுவீகாரத்துக்குள் வளர வேண்டியது அவசியம். *1 பேதுரு 2:2,3.*

இயேசுவின் கட்டளைகள் மோசேயின் பிரமாணத்தில் உள்ள கட்டளைகள் போன்று அல்ல. அவைகள் "ஜீவப்பிரமாணங்களுக்குரிய" கட்டளைகளாக இருக்கின்றன. தேவன் தாம் உருவாக்கின எல்லாவற்றுக்கும் இயற்கை நியதிகளை வைத்திருக்கின்றார். அந்த இயற்கை நியதிகளை நாம் ஏற்றுக்கொள்வது போலவே, அவைகளையும் ஏற்றுக்கொள்கிறோம். தேவன் நம்மை எவ்விதமாக உருவாக்கினாரோ அவ்விதமாகத்தான் நாமிருக்கிறோம். தேவனிடமிருந்து, அல்லது





இயேசுவிடமிருந்து, அல்லது நம்மிடமிருந்து வரும், ஒரு நேரடியான கட்டளையினால் நம்மால் எதிரியிடம் அன்புகூர முடியாது. நமக்கு ஆவிக்குரிய வளர்ச்சியை உண்டாக்கும் இயேசுவின் கட்டளைகள் பயிற்சிகளாகத் தான் இருக்கின்றன. இழந்து போனவர்களிடம் அன்புகூரவேண்டுமென்ற கட்டளையை நாம் ஏற்றுக்கொண்டு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிப்பதன் மூலம் அதை செயல்படுத்துகிற போது, இழந்து போனவர்களிடம் உணர்வு பூர்வமாக அன்புகூருகின்ற எண்ணமும் நமக்குள் உருவாகிவிடும். "நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்" என்று சொன்ன பவுலுடைய உதாரணத்தை நாம் பின்பற்றுகிறோம். *1 கொரி. 9:19.*

நாம் அடுத்த முறை விருந்து செய்யும் போது ஏழைகளை விருந்து சாப்பிட அழைப்பதும், நம்மை நாமே எல்லாருக்கும் அடிமையாக்கும் ஒரு பயிற்சியாக இருக்கின்றது. இது நீதியுள்ள நடக்கையாக இருக்கின்றது. இதை நடைமுறைப்படுத்த அகப்பே (Agape) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ள தரமான அன்பு தேவைப்படுகின்றது. *ரோமர் 5:6-8.* இப்பேர்பட்ட தரமான அன்பை நாம் வெளிப்படுத்துவதற்கு வெளியில் இருந்து எந்த வற்புறுத்தலும் தேவைப்படாது. இயேசு தமது தாய்க்காகவும் , சீஷர்களுக்காகவும் தம்மைக் கொலை செய்யும்படி ரோமர்களை தூண்டின மக்களுக்காகவும் மரித்தார். அன்பு பட்சபாதம் காண்பிப்பதில்லை. *யாக்கோபு 2:1-5.* "வசதி குறைந்த நிலையில்" உள்ளவர்களை நம்முடைய ஐக்கியத்திற்குள் அழைப்பது என்பது நமது அன்பை வெளிப்படுத்தும் ஒரு பயிற்சியாக இருக்கின்றது. ராஜ்யத்துக்கு உகந்த நீதியுள்ள நடக்கையை பழகிக்கொள்வதற்கு, நமக்குள்

அன்பை உண்டாக்கும்படி இயேசு தெரிவித்த சவாலான பயிற்சிகளை நாம் ஏற்றுக்கொள்வது அவசியமானது.

தேவனுடைய ஆசீர்வாதங்களை மற்றவர்களை விட அதிகமாக வைத்திருக்கும் கிறிஸ்தவர்கள் அவைகளைப் பயன்படுத்துவதில் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டியது அவர்களுடைய கடமை. நம் வாழ்வில் மதிப்பு வாய்ந்தவைகளாக நாம் நினைக்கும் காரியங்களின் பொதுவான அம்சமாக அன்பு இருந்தால், நம்முடைய சத்துருக்களையும் புறம்பே தள்ளமாட்டோம். தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்ற நமக்கு இதுவே உயர்ந்த குறிக்கோளாக இருக்கின்றது. *மத்தேயு 5:43-48.* இதுவே நம்முடைய பட்டியலில் அடுத்த தலைப்பாக இருக்கின்றது. இதில் பெரும்பாலான பகுதியை, உண்மையுள்ள உக்கிராணக்காரரைப் போல கிறிஸ்தவர்கள் செயல்படுவதைக் குறித்து நாம் ஏற்கனவே படித்தபோது பார்த்துவிட்டோம். விருந்துக்கு அழைக்கின்ற பொறுப்பில் இருக்கின்ற நாம் யாரை விருந்துக்கு அழைப்போம்? எடுக்கும் முயற்சி உங்களுடைய நேரத்தையும், சக்தியையும் வீணாக்குவதாக இருந்தும், மற்றவர்களுக்கு நன்மையாக இருக்குமானால், அதைக்குறித்து இயேசு வாக்குத்தத்தம் பண்ணுவதை தயவுகூர்ந்து கவனியுங்கள். “நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்.*” லூக்கா 14:14.* அவருடைய வாக்குத்தத்தம் மரணம், பரலோகம், நரகம் முதலியவைப் பற்றிய வேதாகம கொள்கையை (Eschatology) அறிமுகப்படுத்துகிறது.

எஸ்கடாலஜி (Eschatology) என்பது இயேசு கிறிஸ்து திரும்ப வந்தபிறகு என்ன நடக்கும் என்பதைப் பற்றிய படிப்பாகும். உலகத்தின் அழிவு, எல்லா மக்களுடைய நியாயத்தீர்ப்பு, பரலோகம் மற்றும் நரகம் ஆகியவைகளும் இதில் அடங்கும். கடைசி நாட்கள் சம்பந்தமான காரியங்கள் இறையியல் வகையை சார்ந்தவைகளாக இருப்பதனால்,





நம்முடைய நீதிநெறி பட்டியலில் இந்த தலைப்பு இடம் பெறவில்லை. ஆயினும், மரணம், பரலோகம், நரகம் முதலியவைப் பற்றிய இந்த வேதாகம கொள்கையின் மீது நமக்கு விசுவாசம் இருக்கின்றதா, இல்லையா என்பதைப் பொறுத்து உலகத்தை நாம் பார்க்கின்ற பார்வை அமையும். “தேவனுடைய ராஜ்யம்” என்ற தலைப்பிலுள்ள எனது புத்தகத்தின் ஆறாம் பாகத்தில் 1–8 வரை உள்ள பாடங்களைப் பாருங்கள். இந்த பாடத்தில் தலைப்புகளாக பட்டியலிடப்பட்டுள்ள ராஜ்யத்தின் நீதிநெறிகள், நம்முடைய உள்ளான மனிதர்களில் ஏற்கனவே இடம் பெற்றிருந்தால் தான் நம்மைவிட கீழான நிலைமையில் இருக்கும் மக்களுக்கு நாம் ஊழியம் செய்ய முடியும். நாம் இயேசுவிடம் அன்புள்ளவர்களாக இருந்தால் அவருக்கு கீழ்ப்படிவோம். அதே சமயத்தில், நமது கீழ்ப்படிதல், நம்மிடமே நாம் அன்புகூருவதற்கு ஒரு வழியாக இருக்கின்றது. கிறிஸ்தவர்களாகிய நாம் சந்தோஷமாய் இருப்பதற்கு நம்முடைய மனங்களையும், இருதயங்களையும் எப்படி பக்குவப்படுத்துவது என்பதைப் பற்றி இயேசு சொல்லிக்கொடுப்பதனால், இயேசுவிடம் அன்புகூருவது என்பது நம்மிடமும், தேவனிடமும், மற்றவர்களிடமும் அன்புகூருவதை அர்த்தப்படுத்துகிறது.

**VII உக்கிராண ஊழியம் :**

“கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான். அநீதியான உலகப் பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால் உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?” *லூக்கா 16:10-12.*

நாம் புரிந்துகொண்டது போல கிறிஸ்தவனுடைய உக்கிராண ஊழியம் என்பது உலகப் பொருட்களை எப்படி நாம் பயன்படுத்துகிறோம் என்பதை மட்டும் குறிப்பதல்ல. எல்லா மக்களும் சமமான நிலையில் பிறக்கவில்லை என்ற கருத்து, கிறிஸ்தவன் உண்மையுள்ள உக்கிராணக்காரனாக செயல்படவேண்டிய கடமைப்பட்டிருக்கிறான் என்ற உண்மையை அறிமுகம் மட்டும் செய்வதில்லை, வலியுறுத்தவும் செய்கின்றது. வேறொருவருக்கு சொந்தமானவற்றை கண்காணிக்கும்படி நியமிக்கப்படும் ஊழியக்காரர்களே உக்கிராணக்காரர்கள். "உலக ராஜ்யத்தில் உள்ள மக்கள்" மத்தியில் உக்கிராணக்காரனாய் வேலை செய்வதற்கு அவன் உயர்ந்த நீதிநெறிகளை பின்பற்றுபவனாக இருக்க வேண்டும். தேவனுடைய ராஜ்யத்தில் நல்ல ஊழியக்காரர்களும், பொல்லாத ஊழியக்காரர்களும் இருக்கிறார்கள் என்று நாம் நினைக்கிறோம். தேவனுடைய ராஜ்யத்துக்கேற்ற கனிகளைக் கொடுப்பதில் "பொறுப்புள்ளவர்களாகவும், பொறுப்பற்றவர்களாகவும்" இருக்கின்ற மக்களைக் குறித்து இயேசு இரண்டு உவமைகளைச் சொன்னார். தயவு கூர்ந்து வாசிக்கவும் *மத்தேயு 25:14-30; லூக்கா 19:11-27.* இந்த உவமைகள் இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்கின்ற வாழ்க்கையை வர்ணிக்கின்றன. மற்றவர்களோடு கூட பகிர்ந்துகொள்ளவேண்டிய திறமைகள் எல்லாக் கிறிஸ்தவர்களிடமும் இருக்கின்றன. பகிர்ந்துகொள்வது நீதியுள்ள நடக்கையாகும். நம்முடைய சொந்த திறமைகளுக்குத் தகுந்தபடி நம்முடைய பிதாவும், கர்த்தரும் நமக்கு பொருட்களையும் (தாலந்து, ராத்தல்) வாய்ப்புகளையும் தருவார்கள். இரண்டு உவமைகளும் நமது ராஜாவாகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும் நியாயத்தீர்ப்பு நாளையும் குறிப்பிட்டு பேசுகின்றன. அந்த நாளில் முக்கிய இடம் பெறக்கூடியவை "செயல்களும், பலன்களும்" தான். "இயேசுவின் உவமைகள்" என்ற என் புத்தகத்தின் நான்காம்





பாகத்தில் இரண்டாம் பாடத்தைப் பாருங்கள். சமூக அளவிலும், மனதளவிலும், ஆவிக்குரிய ரீதியிலும் கிறிஸ்தவர்களாகிய நாம் இருக்கும் நிலையில் இல்லாத மக்களுடன், நம்முடைய நிலையை எப்படி பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதை பார்த்தோம். இப்பொழுது நம்முடைய உக்கிராண ஊழியத்தோடு, நம் பொருளாதார அந்தஸ்தை தொடர்புபடுத்தி கவனிக்கலாம்: "தங்களுக்குத் தேவையானவற்றை வைத்திருப்பவர்களும், வைத்திராதவர்களும்." பவுல் தீமோத்தேயுவிடம் இவ்விதமாகச் சொன்னான்:

*இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர் களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு. 1 தீமோ. 6:17-19.*

இந்தப் பாடத்தில் நாம் விவாதித்த பல தலைப்புகளை இந்த வசனம் சேர்ந்தாற்போல் கொண்டுவருகிறது. தனக்கு இருக்கும் ஐசுவரியத்தை நன்மை செய்வதற்காக பயன்படுத்துகின்ற ஐசுவரியமுள்ள ஒரு ஆண்/பெண் மிக உயர்ந்த நீதிநெறிகளை கொண்டிருக்கிறான்/ள். நீதிநெறிகள் என்ற வார்த்தையை சமுதாயத்தில் எந்த நிலையில் வாழ்கின்ற மக்களும் புரிந்து கொள்ளக்கூடும்; அதனால், இந்தப் பாடத்தில் அதைப் பயன்படுத்தி இருக்கிறோம். வேதம் இவைகளை நன்மை மற்றும் தீமை

என்று குறிப்பிடுகிறது. ஆகையினால், தன்னுடைய ஐசுவரியத்தை பகிர்ந்து கொள்ளாத ஐசுவரியவான்/ஐசுவயரிம் உள்ளவள் பொல்லாதவனா (ளா)யிருக்கிறான்/ள். ஒரு சூழ்நிலையில் தரித்திரராய் இருக்கும் மக்களை, வேறொரு இடத்திலுள்ள மக்களுக்கு ஒப்பிட்டு பார்க்கும்பொழுது, அவர்கள் ஐசுவரியமுள்ளவர்களாக இருக்கலாம். *லூக்கா 16:1-13* வரை உள்ள வசனங்களில் இயேசு சொல்லும் உவமையை தயவுகூர்ந்து வாசியுங்கள். சட்டப்பூர்வமாக, நாம் வைத்திருக்கும் எல்லாப் பொருட்களும் தேவனுக்குச் சொந்தமானவை என்பதே இயேசுவின் முடிவாகும். அவரே அவைகளை உருவாக்கினார். நாம் உக்கிராண ஊழியம் செய்வதற்கும், நம்முடைய தேவைகளை சந்திப்பதற்கும் அவரே அவைகளை நமக்குக் கிடைக்கச் செய்தார். தேவனுடைய கிருபையினால் நாம் ஒரு உரிமையைப் பெற்றிருக்கின்றோம். *லூக்கா 16:16* பார்க்கவும். இது தேவனுடைய இருதயத்தில் நமக்கு உள்ள இடத்தைக் குறிக்கின்றது. பிதாவின் வீட்டில் தேவனுடைய பிள்ளைகளுக்கென்று ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணுவதற்காக இயேசு போய்விட்டார். *யோவான் 14:1-4.* "ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு" "ஆபிரகாம்" காத்திருந்தான். *எபிரெயர் 11:10.* ஒவ்வொரு மனிதனுடைய ஆவியும் தேவனிடமிருந்து வந்ததாகும். ஒவ்வொரு விசுவாசமுள்ள கிறிஸ்தவனுடைய உள்ளான மனிதனும் நமது பிதாவின் வீட்டிற்கு செல்லுகின்றது. *எபிரெயர் 3:6.* நம்முடைய உக்கிராண ஊழியத்தை நமக்கு திரும்ப எதுவும் கொடுக்க முடியாத மக்களுக்கு உதவி செய்வதன் மூலம் செயல்படுத்தும்படி இயேசு நமக்கு கட்டளையிடுகிறார். இது அன்பை (Agape) வெளிப்படுத்தும் ஒரு பயிற்சியாக இருக்கின்றது. இந்தச் செயல் பரலோகத்திலிருக்கும் உரிமையை நமக்குத் தருமா? நிச்சயமாக இல்லை; ஆயினும் இது "நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத் திற்காக" நமக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கும்.





இயேசு தமது மலைப்பிரசங்கத்தின் கடைசியில் குறிப்பிட்ட அஸ்திபாரம் இதுதான். "நித்திய ஜீவனை" பற்றி பல கொள்கைகளை போதித்த பிறகு அவர், "நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்" என்று சொன்னார். *மத்தேயு 7:24.* இப்பொழுது நாம் பெற்றிருக்கின்ற இந்த "உள்ளான மனிதன்" தான் நியாயத்தீர்ப்பு நாளில் நிற்கும். நல்ல ஆதாரத்தை உடைய "உள்ளான மனிதன்" சாத்தானுக்கு எதிராக நிற்கத்தக்க வல்லமை உடையதாக இருக்கும்; இப்பேர்பட்ட உள்ளான மனிதனுக்குத் தான் "உயிர்த்தெழுதலில் பதில் செய்யப்படும்." நான்கு சுவிசேஷ புத்தகங்களிலும் இயேசு போதித்த எல்லாத் தலைப்புகளையும் நாம் பட்டியலிடவில்லை. ஆனால் கிறிஸ்தவர்கள் மற்ற மக்களுக்கு "உப்பாகவும் வெளிச்சமாகவும்" இருக்கும்படி அவர்களை ஊக்குவிக்கக் கூடிய வல்லமைகளாகிய நீதிநெறிகளை நாம் கவனித்திருக்கிறோம்.

### VIII தூஷணம் :

"ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை." *மத்தேயு 12:31.*

உலக ஒழுக்கங்களை கற்றறிந்துள்ள கல்விமான்கள் இந்த வசனத்தைக் குறித்து பல புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள். எப்படியிருந்தாலும், பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டைக் குறித்து நாம் முதலில் புரிந்துகொண்டாலொழிய, இதைச் சொன்ன போது இயேசுவின் மனதில் என்ன இருந்தது என்பதை நாம் புரிந்துகொள்வது கடினமாக இருக்கலாம். இதைப்பற்றி நாம் படிக்க ஆரம்பிப்பதற்கு ரோமர் 8ஆம்

அதிகாரம் தான் சரியான இடம். தேவனுடைய பிள்ளைகளை இயேசு தேவனுடைய வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்க்கும்படியான தேவனுடைய திட்டத்தில், பரிசுத்த ஆவியானவருடைய செயல்பாடு எப்படி நீதி உள்ளதாக இருக்கிறது என்பதை காண்பிப்பதற்கு இந்தப் பாடத்தில் இடம் போதாது. நம்மை சுத்திகரிப்பதில் பரிசுத்த ஆவியானவருடைய பங்கைக் குறித்து நாம் தனிப்பட்ட முறையில் புரிந்துகொண்ட பிறகு தான், "ஆவியானவருக்கு விரோதமாக தூஷணமாய் பேசுகிறவர்களை" குறித்து இயேசு சொன்னதை நாம் நன்றாக புரிந்துகொள்ள முடியும். "தேவனுடைய ராஜ்யம்" என்ற எனது புத்தகத்தின் ஐந்தாம் பாகத்தில் ஏழாம் பாடத்தை தயவுகூர்ந்து பாருங்கள்.

வயதில் பெரியவர்களாக இந்த "உலக ராஜ்யத்தில்" வாழ்பவர்கள் மறுபடியும் பிறந்தாலொழிய, அவர்களால் தேவனுடைய ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருக்கமுடியாது. *யோவான் 3:3-8.* இவர்கள் ஆவிக்குரிய காரியங்களை உணர முடியாதவர்களாகவோ அல்லது கண்களால் பார்க்க முடியாத எது ஒன்றையுங் குறித்து அக்கறை இல்லாதவர்களாகவோ இருப்பதனால், பரிசுத்த ஆவியானவருடன் இவர்களுக்கு உறவு இல்லாமல் இருக்கின்றது. இவர்கள் விருப்பமுள்ளவர்களாய் பரிசுத்த ஆவியானவரை தூஷிப்பவர்கள் அல்ல. ஆவிக்குரிய காரியங்களை விசுவாசத்தினால் மாத்திரமே தெரிந்துகொள்ள முடியும். அந்த விசுவாசம் தேவனுடைய வசனத்தை படிப்பதிலிருந்து வரும். கொரிந்து சபையில் சில அங்கத்தினர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் ஆவிக்குரிய வாழ்க்கையோடு தொடர்பு அற்றவர்களாகவும், பரிசுத்த ஆவியானவரோடு ஐக்கியம் இல்லாதவர்களாகவும் இருந்தார்கள். பார்க்கவும் *1 கொரி 3:1-4; 4:18-20.*

இயேசு பேசியதை நேரடியாகக் கேட்டவர்கள் யூதர்கள். *மத்தேயு 12:22,23; மாற்கு 3:20-30; லூக்கா 12:1-10.* பரிசுத்த ஆவியானவரோடு தனிப்பட்ட உறவினை அவர்கள் ஒருபோதும் அனுபவித்து மகிழ்ந்ததில்லை.





பரிசுத்த ஆவியானவர் இருப்பதைக்குறித்து யோவான்ஸ்நானன் யூதர்களுக்கு அறிவித்தான். *மத்தேயு 3:11.* புதிய பிறப்பிற்கான செயல்முறைகளில் பரிசுத்த ஆவியானவரின் பங்கைக் குறித்து இயேசு கிறிஸ்து விளக்கினார். "ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்." *யோவான் 3:5-8.* பரிசுத்த ஆவியானவருடன் கிறிஸ்தவர்களுக்கு ஐக்கியம் இருப்பதினாலேயே அவர்கள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்கள். *ரோமர் 6:11; 2 கொரி. 13:14; 1 யோவான் 3:24.* யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு மக்கள் மறுபடியும் பிறப்பதைக் குறித்து ஏற்கனவே ஒன்றும் அறியாதவனாய் இருந்தான். *யோவான் 3:1-4.* இயேசு கிறிஸ்துவிடம் கேள்வி கேட்டவர்கள் யோவான்ஸ்நானனுடைய ஞானஸ்நானத்தை ஏற்றுக்கொள்ளவுமில்லை, நசரேயனாகிய இயேசு தம்மைக் குறித்து சொன்னபடி கிறிஸ்துவாகிய தேவனுடைய குமாரன் என்று அவரை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. *லூக்கா 20:1-7.* பரிசேயருக்கு பரிசுத்த ஆவியானவரோடு எந்த ஒரு தனிப்பட்ட உறவும் இல்லாதிருந்தும் இயேசு அவர்களிடம் "தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத்" தாம் துரத்துவதாகச் சொன்னார். *மத்தேயு 12:28.* பரிசுத்த ஆவியானவரைத் தூஷிப்பதைக் குறித்து இயேசு பேசிய போது, கிறிஸ்தவர்களையும் அவர் மனதில் வைத்து பேசினார்.

கிறிஸ்தவர்கள் மறுபடியும் பிறக்கும் வரையிலும் பரிசுத்த ஆவியானவர் மனுக்குலத்துடன் ஐக்கியம் கொண்டதில்லை. *யோவான் 7:37-39. மத்தேயு 12:31; மாற்கு 3:29; லூக்கா 12:10* ஆகிய வசனங்களில் இயேசு சொன்ன வாக்கியம் கிறிஸ்தவர்களுடைய பிரயோஜனத்துக்காகவே சுவிசேஷ புத்தகங்களில் எழுதிவைக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு நாம் வரலாம். அப்படியானால் நாம் கேட்பது, "எப்படி ஒருவன் பரிசுத்த ஆவியானவரை தூஷிக்கிறான்?" பரிசுத்த

ஆவியானவரை தூஷிப்பது நீதிக்கு விரோதமானது என்பதை நாம் அனைவருமே நிச்சயம் ஒத்துக்கொள்வோம். உண்மையில், இம்மையிலும், மறுமையிலும் ஒருபோதும் மன்னிக்கப்படமுடியாத ஒரு பொல்லாத காரியமாக இது இருக்கின்றது. பிளாஸ் ஃபிமியோ (blasphemeo) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து தூஷித்தல் என்ற வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் பொருள் பொல்லாத பேச்சினால் காயம் உண்டாக்குவது என்பதாகும். எல்லா வசனங்களுக்கும் செய்வது போலவே இதற்கும் நாம் சந்தர்ப்பப்பொருளை கவனிக்கலாம். நமது ஆராய்ச்சி வேலை பொதுவாக இந்தப் பத்தியின் அர்த்தத்தை அறிந்து கொள்வதாக இருக்கலாம். ஆயினும், பரிசுத்த ஆவியை தூஷிப்பது குறித்த இயேசுவின் வாக்கியம் தனித்து நிற்பதாக இருக்கக்கூடும். வேறு வார்த்தையில் சொல்வதென்றால், இது ஒரு கண்டிப்பான எச்சரிக்கையாக இருப்பதனால், இதற்கு சந்தர்ப்பப் பொருள் பார்க்க வேண்டியதில்லை.

இருப்பினும் *மத்தேயு 12:22-31* வரை உள்ள வசனப் பகுதியின் சந்தர்ப்பப் பொருளை கவனிப்பது மதிப்பு வாய்ந்ததாக இருக்கும். குருடும் ஊமையுமான பிசாசு பிடித்திருந்தவனை இயேசு குணமாக்கினார். பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறான்" என்று பரிசேயர் சொன்னார்கள். *25-29* வரை உள்ள வசனங்களில் அவர்களுடைய வாக்கியத்தை அவர்களுக்கு எதிராகவே திருப்பிய பிறகு இயேசு இவ்விதமாக அறிவித்தார்: "எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால், அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை." *வசனம் 32.* இயேசு தம்முடைய அறிவிப்பை கிறிஸ்தவர்களாகிய நமக்காகத்தான் சுவிசேஷ புத்தகங்களில் பதிவு செய்ய வைத்திருக்கிறார் என்ற உண்மையை நாம் உன்னிப்பாக கவனிக்கவேண்டும்.





கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியை தூஷிக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள் என்பதும் சரியான அனுமானமாக இருக்கலாம். நாம் வாசிக்கும் வேத வசனங்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டவை. *2 தீமோத்தேயு 3:16,17.* நமது புதிய பிறப்பின் கடைசி கட்டத்தில் தேவன் தம்முடைய மனதிலிருந்து நமது பாவங்களை அகற்றி விட்டபிறகு, நாம் பரிசுத்த ஆவியானவருடன் ஐக்கியம் கொள்வதனால் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகின்றோம். *ரோமர் 6:4.* நம்மை தேவனுடைய பிள்ளைகளாக உருவாக்கும்படி பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு மணி நேரமும் நம்மை வழி நடத்துகின்றார். வாசிக்கவும் *ரோமர் 8:1-27.* ராஜ்யத்திற்குரிய இன்னும் இரண்டு தலைப்புகளை நாம் கவனிக்க இருப்பதனால், இந்த சிந்தனையை மனதில் வைத்துக்கொள்ளலாம்; இந்தத் தலைப்புகள் எல்லாத் தரப்பினரும் மிக உயர்ந்த நீதிநெறியுடன் நடந்துகொள்ளும்படி வலியுறுத்துகின்றன.

### IX திருமணம் :

"ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன்." *மத்தேயு 19:6.*

தேவன் ஒன்றாக இணைத்ததை பிரிப்பது என்பது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தின் கலாச்சாரத்தில் **அநீதியான** செயலாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசனம் பரிசுத்த ஆவியானவரால் மத்தேயுவுக்கு கொடுக்கப்பட்டது. மத்தேயு என்ன எழுதினான் என்பதை மக்கள் புரிந்துகொண்ட பின்பும், தேவன் ஒன்றாக இணைத்ததை பிரிக்கும் முயற்சியில் இறங்கினால், அவர்கள் பரிசுத்த ஆவியானவருடைய வார்த்தைகளை தூஷித்துவிட்டார்கள். பரிசுத்த ஆவியானவருடைய வார்த்தைகளை தூஷிக்கும் செயலை மனதில் வைத்து இயேசு கிறிஸ்து அப்பொழுது பேசவில்லையென்றாலும், கிறிஸ்தவர்கள் ஒரு நீதிநெறிக்

கொள்கையை முழுமையாக புரிந்துகொண்டு, அநீதியான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது அவர்களுக்கு மிக மோசமான ஆவிக்குரிய பிரச்சனையை கொண்டுவரும். *2 பேதுரு 2:17-22.* நம்முடைய இருதயங்கள் கடினமாவது தான் பிரச்சனையாக இருக்கின்றது. ஒருவன் தான் சரியென்று தெரிந்துகொண்டதை சீர்குலைப்பானேயானால், அவன் தன்னுடைய மனச்சாட்சியையும் சீர் குலைத்துக்கொள்கின்றான். அவனுடைய மனச்சாட்சி அவனுடைய நடக்கையை ஏற்றுக்கொள்ளாது. ஆகையினால், இந்த மனிதன் மனந்திரும்பி ஆக வேண்டும் அல்லது தன் இருதயத்தை கடினப்படுத்திக் கொள்ளவேண்டும். ராஜ்யத்திற்குரிய ஒரு கொள்கையை சீர்குலைக்கின்ற ஒரு கிறிஸ்தவன், அதை முழுமையாக புரிந்துகொண்டவுடனேயே குற்ற உணர்ச்சிக்கு எதிராக தன் இருதயத்தை கடினப்படுத்திக்கொள்ளவேண்டும் அல்லது அந்தக் கொள்கையை மாற்ற ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். நீண்ட காலத்திற்கு தங்கள் இருதயங்களை கடினப்படுத்தி வைத்திருப்பவர்கள் மனந்திரும்பாமலே போய் விடக்கூடும். தயவுகூர்ந்து வாசிக்கவும் *எபிரெயர் 6:4-6; 12:14-17.*

தாங்கள் உண்மையென்று நம்புவதை மாற்றுவதற்கு விரும்பி, மனந்திரும்ப விருப்பம் இல்லாதவர்கள், வேத வசனங்கள் தற்காலத்துக்கு பொருந்தாதவைகள் என்று தீர்மானித்துவிட்ட மதத்தலைவர்களிடம் தான் பெரும்பாலும் போகிறார்கள். ஒரு ஆண் ஒரு பெண்ணைத்தான் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்ற உண்மையை வேத வசனங்கள் மிகவும் வெளிப்படையாக சொல்கின்றன. மக்கள் தங்கள் அனுதின வாழ்க்கையில் எப்படி வாழவேண்டுமென்று தினசரி வாசித்து பிரயோஜனப்படுத்துவதற்காகவே தேவனுடைய வசனங்கள் எழுதப்பட்டன. தேவன் நம்மிடம் பேசுவதை கேட்பதற்கு நமக்கு மத்தியஸ்தர் எவரும் தேவை இல்லை. வாசிக்கவும் *மத். 5:31,32;19:3-13; ரோ. 7:1-3; 1 கொரி. 7:1-17, 36-40.*





‘‘மலைப்பிரசங்கம்’’, என்ற எனது புத்தகத்தின் 3ஆம் பாகத்தில் ‘‘விபச்சாரமும் விவாகரத்தும்’’ என்ற மூன்றாம் பாடத்தையும், “கொரிந்தியருக்கு எழுதப்பட்ட நிருபங்கள்” என்ற புத்தகத்தின் நான்காம் பாகத்தில் ‘‘மனுக்குலமும் உடலுறவு ஆசையும்’’ என்ற ஒன்றாம் பாடத்தையும் தயவுகூர்ந்து பாருங்கள்.

**X புறஜாதிகள் :**

‘‘புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்.” *லூக்கா 2:30,31,32.*

“வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கை” என்ற ஆறாம் பாடத்தை தயவுகூர்ந்து திருப்பி பாருங்கள். இந்தப் பாடத்தொகுப்பில் மேற்கண்ட பாடத்தை நாம் ஏற்கனவே பார்த்துவிட்டபடியால், கொர்நேலியுவின் வீட்டாரை பேதுரு சந்தித்ததைப் பற்றி அவன் விளக்கிச் சொன்னபிறகு, எருசலேமிலுள்ள சபை என்ன சொல்லியதோ அதைவிட அதிகமாக நாம் ஒன்றும் சொல்லத்தேவையில்லை: “இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து: அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.” *அப்போஸ்தலர் 11:18.* பவுலும், பர்னபாவும் தங்களுடைய முதல் ஊழியப்பயணத்தின் போது இதை பிரசங்கித்தார்கள். அவர்கள் புறப்பட்டு அந்தியோகியாவுக்கு வந்தார்கள். அவர்கள் அங்கே சேர்ந்தபொழுது சபையைக் கூடிவரச்செய்து, தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு “**விசுவாசத்தின் கதவை**” திறந்ததையும் அறிவித்தார்கள். *அப்போஸ்தலர் 14:27.*

புறஜாதிகளுக்கு ஒளியாக அப்போஸ்தலனாகிய பவுலை இயேசு அனுப்பினார். விசுவாசத்தின் கதவை புறஜாதிகளுக்கு திறப்பதன் மூலமாக பவுல் தன் “இனத்தாருக்குள்ளே... வைராக்கியத்தை எழுப்பி அவர்களில் சிலரை இரட்சிக்க” முடியும் என்று நம்பிக்கைக் கொண்டிருந்தான். *ரோமர் 11:13,14.* இதில் விசித்திரமான விஷயம் என்னவென்றால், பக்தியுள்ள பரிசேய யூதனாய் இருந்தவனும், அப்போஸ்தலனாகிய பவுல் என்று அறியப்பட்டவனுமாகிய சவுலை புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி அனுப்பியது தான். எப்படியிருந்தாலும், மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மீது விசுவாசம் உள்ளவனாயிருந்த பக்தியுள்ள பேதுருவை புறஜாதிகளுக்கென்று முதல் பிரசங்கியனாக அவர் அனுப்பினார். *அப்போஸ்தலர் 10:39-44; பிலிப்பியர் 3:3-6.* இயேசு தமது பிதாவுக்காக யூதருக்கு ஒரு சபையும், புறஜாதியாருக்கு ஒரு சபையுமாகக் கட்டவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. தேவன், யாக்கோபு மூலமாய் உருவான ஆபிரகாமின் சந்ததியாரை மற்ற தேசங்களை விட்டுத் தனிமைப்படுத்தினார். *ஆதியாகமம் 12:1-3.* அப்போஸ்தலனாகிய பவுலுக்கு வெளிப்படுத்தப்படும் வரைக்கும் தேவன் புறஜாதியாரை என்ன செய்ய திட்டமிட்டிருந்தார் என்பது இரகசியமாகவே இருந்தது. தேவன் தாம் ஏற்படுத்தியுள்ள நீதிநெறிகளை செயல்படுத்து வதற்கு உண்மையுள்ளவராக இருக்கின்றார். *ரோமர் 3:1-8.* அவர் பட்சபாதம் காண்பிப்பதில்லை. வெளிப்படுத்தப்பட்ட இரகசியம் :

*புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக் கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப் படுத்தி அறிவித்தார். எபேசியர் 3:3.*





**XI தலைமைப் பண்பு :**

*தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததை யும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து; போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். யோவான் 13:3-5.*

ஒவ்வொரு சபையிலும் மூப்பர்கள் இருக்கவேண்டும் என்ற இயேசுவின் திட்டத்தை அகற்றிவிட்டதனால், “கிறிஸ்தவ உலகம்” என்று அழைக்கப்படுகின்ற உலகத்தைச் சேர்ந்தவர்கள் தேவனுடைய ஞானத்துக்கு எதிராக செயல்பட்டுவருகிறார்கள். பார்க்கவும் *அப்போஸ்தலர் 14:23.* இவ்விதமாக அவர்கள் “சீலையையும், கழுவும் பாத்திரத்தையும்” தெரிந்துகொள்ளும் மன நிலையிலிருந்து, “முதன்மையான இடத்தை” தெரிந்துகொள்ளும் மனநிலைக்கு மாறிவிட்டார்கள். முதன்மையான இடத்தை தெரிந்துகொள்ளும் தலைமைப் பண்பு அநீதியுள்ளது; எப்படியிருந்தாலும், நமக்கு “நன்மை உண்டாகும் பொருட்டு” இவ்விதமான தலைமைப் பண்பை உலக ராஜ்யத்தில் தேவன் பயன்படுத்துகின்றார். “தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவஊழியக்காரனா யிருக்கிறானே.” *ரோமர் 13:1-7.* அரசியல் மனநிலைக்கொண்ட மதத் தலைவர்களால், மந்தையை மேய்க்கும் மனநிலைக்கொண்ட தலைமைப் பண்பு அகற்றப்படுவது என்பது, பரிசுத்த ஆவியானவர் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களைக் கொண்டு மீண்டும் மீண்டும் எழுத வைத்த அவருடைய

வார்த்தைகளுக்கு எதிரான தூஷணமாகவே இருக்கின்றது. தீத்துவுக்கும் தீமோத்தேயுவுக்கும் அப்போஸ்தலனாகிய பவுல் சொன்ன புத்திமதிகளை மதத்தலைவர்கள் புரிந்துகொள்வதினால், இது தூஷணமாக இருக்கின்றது. பார்க்கவும் *1 தீமோத்தேயு 3:1-7; தீத்து 1:5-9.* கள்ளப் போதகர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பக்தியுள்ள மக்களில் அநேகர், சபை அரசாங்கத்தோடு சம்பந்தப்படுத்தி "எழுதப்பட்டதற்கு மிஞ்சி" தாங்கள் போய் விட்டார்கள் என்பதை அறிந்தவர்களாகத் தான் இருக்கிறார்கள். *1 கொரி. 4:6; 2 பேதுரு 2:1.* ஆகையினால், நீதிநெறி தொடர்பான இந்தப் பிரச்சனை சபை அரசாங்கத்தைப் பற்றியதல்ல. மக்கள் தேவனுடைய சித்தத்தை தெரிந்துகொண்டபின்பும் அதை செய்ய மறுக்கும் போது, மனப்பூர்வமான பாவத்தைச் செய்கிறார்கள். "சீலையையும் கழுவும் பாத்திரத்தையும்" பயன்படுத்துகின்ற நமது ராஜாவின் தலைமைப் பண்பை மாற்றுவது, தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தின் கலாச்சாரத்தின்படி மனப்பூர்வமான பாவமாக இருக்கின்றது. "இயேசு கிறிஸ்து செய்த தேவனுடைய சுவிசேஷ ஊழியம்" என்ற எனது புத்தகத்தின் முதலாம் பாகத்தில் ஒன்றாம் பாடத்திலுள்ள 5,6 பக்கங்களையும், "தேவனுடைய ராஜ்யம்" என்ற புத்தகத்தின் ஐந்தாம் பாகத்தில் "சபை அரசாங்கம்" என்ற 13ஆம் பாடத்தையும் பாருங்கள்.

*சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். எபிரெயர் 10:26-27.*